Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 37 | கதிர் : 337 | சனிக்கிழமை 29 ஒக்ரோபர் 2022 | ஐப்பசி 12 ஆம் நாள் வள்ளுவர் ஆண்டு 2053 | பக்கங்கள்: 12 விலை : ரூ. 50

## விவசாயிகளுக்கு யூரியா உரம் ரூபா 10,000!

கொழும்பு, ஒக். 29
உலக வங்கியின் 110 மில்லியன் அமெரிக்க டொலர் துரித கடன் திட்டத்தின் கீழ் 13 ஆயிரம் தொன் யூரியாவின் ஒரு பகுதி விவசாய அமைச்சிடம் நேற்றுக் 11

# நாட்டை இப்போதும் ஆள்வது நாம்தான்!

## மார்தட்டுகின்றார் மஹிந்த



கொழும்பு, ஒக்ரோபர் 29
நாட்டை இப்போதும் நாம் தான் ஆட்சி செய்கின்றோம். எமது கட்சிதான் இப்போதும் நாட்டை ஆள்கின்றது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் எமது பக்கமே நின்று பணியாற்றுகின்றார் - இவ்வாறு முன்னாள் ஜனாதிபதியும் பொதுஜன முன்னணியின் தலைவருமான மஹிந்த ராஜபக்ச தெரிவித்தார். 11



## வடக்கு அபிவிருத்தி தொடர்பில் கொழும்பில் ஆசியான் மாநாடு!

கொழும்பு, ஒக். 29
வடக்கு அபிவிருத்தி தொடர்பான ஆசியான் மாநாடு கொழும்பில் உள்ள ஜப்பான் தூதரகத்தில் நேற்று இடம்பெற்றது.
குறுகிய காலத்தில் வடமாகாணத்தை அபிவிருத்தி செய்து, மக்களின் வாழ்வாதாரத்தை முன்னேற்றமடையச் செய்வதுடன், வெளிநாட்டு முதலீட்டை வடக்குக்குக் கொண்டு 11

## பெரமுனவின் கட்டளையின்படி செயற்படும் அரசே ஆட்சியில்!

### சஜித் சுட்டிக்காட்டு



கொழும்பு, ஒக். 29
பெரமுனவின் கட்டளைப்படி செயற்படும் அரசாங்கமே இப்போதும் ஆட்சியில் உள்ளது - இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-
'குறுகிய அரசியல் வேறுபாடுகளை மறந்து நாட்டை மீளக் கட்டியெழுப்புவதற்காகவே 22 ஆவது அரசமைப்புத் திருத்தத்துக்கு ஐக்கிய 11

### கோவை கார்வெடிப்பு

## ஈஸ்டர் தாக்குதல்தாரியுடன் சந்தேகநபருக்கு தொடர்பு

சென்னை, ஒக். 29
கோவை கார்க் குண்டுவெடிப்பில் கைதுசெய்யப்பட்ட ஒருவர், இலங்கையில் நடத்தப்பட்ட உயிர்த்த 11

## சேந்தான்குளம் கடலில் ஆணின் சடலம் மீட்பு!

யாழ்ப்பாணம், ஒக். 29
இளவாலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சேந்தான்குளம் 11

### தியாகோகார்சியா தீவில் உள்ளவர்களை

## இலங்கைக்கு நாடுகடத்தினால் அவர்கள் துன்புறுத்தப்படுவார்கள்

அகதிகளின் சட்ட ஆலோசகர் தெரிவிப்பு விரிவு - பக். 11

### குருந்தூர்மலை விவகாரம்;

## மக்களின் காணிகளை உடன் விடுவியுங்கள்!

### அமைச்சர் விதுர உத்தரவு

கொழும்பு, ஒக். 29
முல்லைத்தீவு குருந்தூர் மலைப் பகுதியில் விவசாயம் மற்றும் ஏனைய நடவடிக்கைகளுக்காக அளவீடு செய்யப்பட்ட காணிகள் தவிர்ந்து இதர பகுதிகளை 11

## பாலின சமத்துவம் உருவாக மூன்று வருடங்கள் தேவை!

### முதற்பெண்மணி மைத்திரி தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 29
பாலின ஒப்புரவு மற்றும் சமத்துவத்தின் நீண்ட வலுவான சக்தியை உருவாக்க எதிர்வரும் மூன்று 11

## ஹெரோய்னுடன் கைதானவர் மறியலில்

யாழ்ப்பாணம், ஒக். 29
மானிப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சங்கானைப்பகுதியில் 30 மில்லிகிராம் ஹெரோய்னுடன் கைதான இளைஞரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.
இது குறித்து மேலும் தெரியவருவதாவது:-
மானிப்பாய் 10

### கோண்டாவில் வாள்வெட்டு

## ஒன்றரை வருடத்தின் பின் சந்தேகநபர் கைதானார்!

யாழ்ப்பாணம், ஒக். 29
யாழ்ப்பாணம் - கோண்டாவில் பகுதியில் இடம்பெற்ற வாள்வெட்டுச் சம்பவத்துடன் 11

### மாணவர்களுக்கு

## போதை மாத்திரைகளை விற்க முயன்றவர் கைது

யாழ்ப்பாணம், ஒக். 29
தெல்லிப்பழை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மல்லாகம் பகுதியில், பாடசாலை மாணவர்களுக்கு 11

## யாழ். பல்கலை கலைப்பீடத்தால் போதைக்கு எதிராக விழிப்புணர்வு

யாழ்ப்பாணம், ஒக். 29
யாழ். பல்கலைக்கழக கலைப்பீட மாணவர் ஒன்றியத்தால், போதைப் பொருளுக்கு எதிராக பாடசாலை மாணவர்களுக்கு விழிப்புணர்வு வழங்கும் செயற்றிட்டம் யாழ்ப்பாணம் அராலி சரஸ்வதி மகா வித்தியாலயத்தில் நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டது.
அண்மைக்காலமாக மாணவர்கள் மத்தியில் போதைப்பொருள் பாவனையும், 10

Digitized by Noolaham Foundation

# க. பொ.த. சாதாரண தர பெறுபேறுகள் நவம்பரில்

கொழும்பு, ஒக். 29
கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சைப் பெறுபேறுகள் எதிர்வரும் நவம்பர் மாதம் 25 ஆம் திகதியின் பின்னர் வெளியிடப்படும் என்று பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது. பரீட்சை விடைத்தாள்கள் மதிப்பீடு செய்யும் நடவடிக்கைகள் பூர்த்தியாகியுள்ளதால் விரைவில் பெறுபேறுகள் வெளியிடப்படும் என்று பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் எல்.எம்.டி. தர்மசேன தெரிவித்துள்ளார்.
கடந்த 2021 ஆம் ஆண்டுக்கான க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை இந்த ஆண்டு மே மாதம் நடைபெற்றது.
பரீட்சைக்கு 5 லட்சத்து 17 ஆயிரத்து 486 பரீட்சார்த்திகள் தோற்றியிருந்தனர். இதில் 4 லட்சத்து 7 ஆயிரத்து 129 பேர் பாடசாலைப் பரீட்சார்த்திகள் என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ-14-இ)

# சீனா நன்கொடை மருந்து நேற்று நாட்டை வந்தடைவு

கொழும்பு, ஒக். 29
இலங்கைக்கு நன்கொடையாக சீனாவால் வழங்கப்பட்ட அத்தியாவசிய மருந்துத் தொகுதி இரு விமானங்கள் ஊடாக நேற்று நாட்டை வந்தடைந்தது எனத் தெரிவிக்கப்படுகிறது.
நாட்டில் நிலவும் மருந்துத் தட்டுப்பாட்டை சமாளிக்கும் வகையில் இந்த நன்கொடை வழங்கப்பட்டுள்ளது எனவும் இந்த மருந்துத் தொகுதியின் பெறுமதி 1.8 பில்லியன் ரூபாவெனவும் கொழும்பிலுள்ள சீனத் தூதரகம் தெரிவித்தது.
இதேவேளை கடந்த ஜூன் மற்றும் செப்ரெம்பர் மாதங்களிலும் 1.2 பில்லியன் பெறுமதியான மருந்துகளை சீனா வழங்கியது என சீனத் தூதரகம் மேலும் தெரிவித்துள்ளது. (ச-இ)

# 12,500 தொன் யூரியா நாட்டை வந்தடைவு

கொழும்பு, ஒக். 29
உலக வங்கியின் நிதியுதவியின் கீழ் 12 ஆயிரத்து 500 மெற்றிக்தொன் யூரியா உரம் அடங்கிய கப்பல் நாட்டை வந்தடைந்துள்ளது என விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.
கப்பலிலிருந்து இறக்கும் பணிகள் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை ஆரம்பிக்கப்பட்டுள்ளன.
இந்த உரம் அம்பாறை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களைச் சேர்ந்த விவசாயிகளுக்கு வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது என விவசாய அமைச்சு மேலும் தெரிவித்தது. (ச-இ)

## ஒன்றுக்கொன்று முரண்பாடான

# எல்லாத் திருத்தங்களுக்கும் கை உயர்த்திய 18 எம்.பிக்கள்

**கொழும்பு, ஒக். 29**
**இலங்கை அரசால் இறுதியாகக் கொண்டுவரப்பட்ட 5 அரசமைப்பு திருத்தங்களுக்கும் நாடாளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் 18 உறுப்பினர்கள் ஆதரவாக வாக்களித்துள்ளனர் என கொழும்பு ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.**

இதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-
அரசமைப்பின் 17,18,19,20 மற்றும் 22 ஆம் திருத்தங்களுக்கே ஆதரவாக வாக்களிக்கப்பட்டுள்ளது.
18 ஆவது திருத்தம் மூலம் நிறைவேற்று ஜனாதிபதியின் அதிகாரம் அதிகரிக்கப்பட்டதுடன் 19 ஆம் திருத்தம் மூலம் நிறைவேற்று ஜனாதிபதி அதிகாரம் குறைக்கப்பட்டது.
அத்துடன் 20ஆம் திருத்தம் மூலம் மீண்டும் நிறைவேற்று ஜனாதிபதியின் அதிகாரம் அதிகரிக்கப்பட்டதுடன் 22 ஆம் திருத்தம் மூலம் நிறைவேற்று ஜனாதிபதியின் அதிகாரம் மீண்டும் குறைக்கப்பட்டது.
இவ்வாறு அரசமைப்பு திருத்தங்கள் மூலம் நிறைவேற்று ஜனாதிபதியின் அதிகாரம் அதிகரிக்கப்படுவதற்கும் குறைக்கப்படுவதற்கும் 18 நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆதரவாக வாக்களித்துள்ளனர்.
இதேவேளை அரசமைப்பின் 19,20 மற்றும் 22ஆம் திருத்தங்களுக்கு 43 நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆதரவாக வாக்களித்துள்ளனர் - என்றுள்ளது. (ச-இ)



# காரைநகர் பிரதேசசபையால் படகுச்சேவைக்கு எரிபொருள்

காரைநகர் பிரதேசசபையால் மண்ணெண்ணெய் வழங்கப்பட்டதையடுத்து, இடைநிறுத்தப்பட்டிருந்த காரைநகர் ஊர்காவற்றுறை பாதைப் படகுச்சேவை நேற்று மதியம் முதல் மீள ஆரம்பிக்கப்பட்டது.
வீதி அபிவிருத்தி அதிகார சபையால் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்ற காரைநகர் ஊர்காவற்றுறைப் படகுச் சேவை மண்ணெண்ணெய் இல்லாமையால் கடந்த ஒரு வாரமாக இடைநிறுத்தப்பட்டிருந்தது.
உரிய அரச அதிகாரிகளால் படகுச்சேவைக்கான மண்ணெண்ணெய் வழங்கப்படும் என்று உறுதிப்படுத்தப்பட்ட போதிலும் எரிபொருள் வழங்கத் தவறியமையால் சேவை நிறுத்தப்பட்டிருந்தது.
இந்த நிலையில் நேற்று வெள்ளிக்கிழமை காரைநகர் பிரதேசசபையால் 200 லீற்றர் மண்ணெண்ணெய் பாதைப்படகுச் சேவைக்கு வழங்கப்பட்டதையடுத்து சேவை ஆரம்பிக்கப்பட்டது. எனினும் மண்ணெண்ணெய் முடிவடையும்வரை சேவை இடம்பெறும் என்றும் அதன்பின்னர் மண்ணெண்ணெய் வழங்கப் படாவிட்டால் சேவை நிறுத்தப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-14-125)


# போதைப்பாவனை அதிகரிப்பு அரசாங்கமே முழுப்பொறுப்பு

## அரசாங்கத்தின் பங்காளியான ஈ.பி.டி.பி. உறுப்பினர் கூறுகிறார்

வடக்கில் என்றுமில்லாத அளவு அதிகரித்து வரும் போதைப்பொருள் பாவனை மற்றும் போதைப் பொருள் விநியோகத்துக்கு அரசாங்கமே முழுப் பொறுப்பு. அரசாங்கம் நாட்டுக்குள் எடுத்துவரப்படும் போதைப்பொருளை கண்டறிந்து உடன் நடவடிக்கை மேற்கொள்ள தீவிரம் காட்டியிருந்தால் இந்த நிலைமை உருவாகியிருக்காது.
இவ்வாறு சபை அமர்வின்போது வலி. மேற்கு பிரதேசசபையின் உறுப்பினர் நடராசா சுட்டிக்காட்டி அரசின் கபடத்தை நையாண்டி செய்து நடனம் ஆடியுள்ளார். அரசாங்கம் போதைப்பாவனையை ஒழிப்பதாக வேசமிட்டு தமிழ் இளைஞர்களை அதற்குள் கட்டுண்ட வைத்து சீரழிக்க முனைகிறது. அரசாங்கத்தின் நாடகத்தை நாமென்றும் அறிவோம்.
நாம் ஊர் ஊராச் சென்று போதைப்பொருள் பாவனையை ஒழிக்க விழிப்புணர்வு ஏற்படுத்தினால் மக்கள் நீங்கள் பொலிஸா? எனக் கேட்கின்றனர்.
போதைப்பொருள் கடத்தல்காரர்களுக்கு எதிராக அரசாங்கம் கடும் தண்டனையளிக்க வேண்டும். நாட்டு மக்களை கொடிய அரக்கனான போதைப் பொருளிலிருந்து பாதுகாக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (ச-27)

# நிவாரணங்களைக் கோருவதால் வரிகளை அறவிடவேண்டியுள்ளது

## நிதி இராஜாங்க அமைச்சர் தெரிவிப்பு



கொழும்பு, ஒக். 29
அரசால் மக்களுக்கு வழங்கப்படும் கொடுப்பனவுகளுக்கு வரி அறவிடுவதன் மூலமே அந்தக் கொடுப்பனவுகளை செலுத்த முடியும் என நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய தெரிவித்துள்ளார்.
நேற்று வெள்ளிக்கிழமை ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.
அவர் மேலும் தெரிவிக்கையில், நாட்டிலுள்ள 68 லட்சம் குடும்பங்களில் 40 லட்சம் குடும்பங்கள் நிவாரணங்களைக் கோருகின்றன.
18 லட்சத்து 50 ஆயிரம் குடும்பங்கள் சமுர்த்தி உதவிகளை பெறுகின்றனர்.
4 லட்சத்து 16 ஆயிரத்துக்கும் மேற்பட்ட குடும்பங்களைச் சேர்ந்தோர் முதியோர் கொடுப்பனவைப் பெறுகின்றனர்.
இதுதவிர விசேட தேவையுடையோர் மற்றும் ஏனைய நிவாரணங்களையும் பலர் பெறுகின்றனர். இதற்கு மேலதிகமாக புதிதாகவும் பலர் உள்வாங்கப்படவுள்ளனர். நாடு தற்போது எதிர்நோக்கிய பொருளாதார நலிவு நிலையில் வரி அறவிடுவதன் மூலமே அந்தக் கொடுப்பனவுகளை செலுத்த முடியும் - என்றார். (ச-இ)

# வடமாகாண பண்பாட்டு விழா இன்று

யாழ்ப்பாணம், ஒக். 29
கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சால் நடத்தப்படும் "வடமாகாண பண்பாட்டுப் பெருவிழா", நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் இன்று சனிக்கிழமை காலை 8 மணி முதல் பிற்பகல் 2 மணி வரை நடைபெறவுள்ளது.
விழாவில் வடக்கு மாகாண 60 வயதுக்கு மேற்பட்ட கலைஞர்களுக்கு துறைரீதியாக "கலைக்குரிசில் விருது", 40 வயதுக்குட்பட்ட கலைஞர்களுக்கு "இளங்கலைஞர் விருது" மற்றும் கடந்தவருடம் வெளிவந்த நூல்களில் துறைரீதியாக சிறந்தநூல்களுக்கு "சிறந்தநூல்" எனும் விருதுகள் வழங்கப்படவுள்ளன.
வடமாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் இ.வரதீஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில், பிரதம விருந்தினராக வடக்கு மாகாண பிரதம செயலாளர் எஸ்.எம்.சமன் பந்துலசேன கலந்துகொள்ளவுள்ளார். (ஒ-14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாலியல் தொந்தரவு;

## பொலிஸ் அதிகாரி பணி இடைநிறுத்தம்

கொழும்பு, ஒக். 29
பாலியல் தொந்தரவுக் குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட பொலிஸ் அதிகாரியொருவர் பணி இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளார்.
அம்பாறை அக்கரைப்பற்று பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பெண் பொலிஸார் மற்றும் பயிற்சி பெண் பொலிஸாருக்கு, பொலிஸ் அதிகாரியொருவர் தொடர்ச்சியாக பாலியல் ரீதியில் தொந்தரவு கொடுத்துள்ளார்.
இது தொடர்பாக பாதிக்கப்பட்ட பெண்பொலிஸார், பொலிஸ் உயர் அதிகாரிகளிடம் முறைப்பாடு செய்தார். அதனையடுத்து பொலிஸ் அதிகாரி கடந்த புதன்கிழமை கைதுசெய்யப்பட்டு பணி இடைநிறுத்தம் செய்யப்பட்டார். (ஒ-14,இ)

# கடந்த 9 மாதங்களில் 1,500 வன்புணர்வுகள்

## கடந்த ஆண்டை விட அதிகம் என்கிறது பொலிஸ்

**கொழும்பு, ஒக். 29**

**வருடத்தின் முதல் ஒன்பது மாதங்களுக்குள் பெண்கள் மீதான பாலியல் வன்புணர்வுகள் மற்றும் சிறுவர்கள் மீதான துஷ்பிரயோகங்கள் உட்பட கிட்டத்தட்ட ஆயிரத்து 500 பாலியல் சம்பவங்கள் பதிவாகியுள்ளன என்று பொலிஸ் பிரிவு தெரிவித்துள்ளது.**



கடந்த ஆண்டை விட இந்த ஆண்டில் பெண்கள், சிறுமிகளின் வன்புணர்வுகள் அதிகரித்துள்ளன.
கடந்த செப்ரெம்பர் 30 ஆம் திகதி வரை, ஒப்புதல் மற்றும் ஒப்புதல் அற்ற பலாத்கார நிலையில் இந்த பாலியல் வன்புணர்வுகள் இடம்பெற்றுள்ளன.
இதில் 273 வன்புணர்வுகள் இளம் வயதினருடன் தொடர்புடையவையாகும். பாலியல் செயற்பாடுகள் பெரும்பாலானவை காதல் விவகாரங்களுடன் தொடர்புடையவை. எனினும் பாதிக்கப்பட்ட பெண்கள் 16 வயதுக்குட்பட்டவர்கள் என்பதால் இது பாலியல் வன்புணர்வுகளாகவே கருதப்படுகின்றன. நாட்டின் தண்டனைச் சட்டத்தின் 363 ஆவது பிரிவின்படி, 16 வயதுக்குட்பட்ட ஒரு பெண்ணுடன் (பெண்ணின் ஒப்புதலுடன் அல்லது இல்லாமல்) உடலுறவு கொள்வது பாலியல் வன்புணர்வுக்கு சமமாகும் என்று பொலிஸ் பேச்சாளர் குறிப்பிட்டுள்ளார். (ஒ-14,இ)

## கௌரிசங்கரி தவராசாவின் நினைவேந்தல் இன்று

யாழ்ப்பாணம், ஒக். 29
ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி.தவராசாவின் மனைவியும், மூத்த சட்டத்தரணியுமான கௌரி சங்கரி தவராசாவின் முதலாம் ஆண்டு நினைவேந்தல் அவரது பிறந்தநாளான இன்று முற்பகல் 10 மணிக்கு, 'வலம்புரி' விடுதியில் நடைபெறவுள்ளது.
கடந்த ஆண்டு ஒகஸ்ட் மாதம் 23ஆம் திகதி கொரோனா பெருந்தொற்றுக்குள்ளாகி அவர் உயிரிழந்திருந்தார். அவரது நினைவாக மலர் வெளியீடும் நடைபெறவுள்ளது. (ஒ-5)

## கொள்ளைச் சம்பவங்கள் பலமடங்கில் அதிகரிப்பு

கொழும்பு, ஒக். 29
நாட்டில் கொள்ளைச் சம்பவங்கள் தற்போது பல மடங்கில் அதிகரித்துள்ளன என்று பொலிஸ் ஊடகப்பேச்சாளர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.
கொழும்பில் நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் உரையாற்றிய அவர் மேலும் தெரிவிக்கையில்;
கடந்த காலங்களுடன் ஒப்பிடுகையில் இந்த வருடத்தின் இதுவரையிலான காலப்பகுதிக்குள் கொள்ளைச்சம்பவங்கள் தொடர்பில் அதிக முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.
இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதிக்குள் மாத்திரம் கார், சைக்கிள், ஓட்டோ, பாரவூர்தி மற்றும் பேருந்து கொள்ளைச்சம்பவங்கள் தொடர்பில் ஆயிரத்து 406 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன -என்றார். (ஒ-14,இ)

## முன்பள்ளி ஆசிரியர்கள் கௌரவிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 29
தென்மராட்சி கல்வி வலய முன்பள்ளி ஆசிரியர்களின் கௌரவிப்பு நிகழ்வு எதிர்வரும் 2 ஆம் திகதி புதன்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு சாவகச்சேரி நகராட்சி மன்ற பொன்விழா மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.
தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் த.கிருபாகரன் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண ஆரம்பப் பருவ அபிவிருத்தி பிரிவு கல்வி அமைச்சின் பணிப்பாளர் ஏ.எஸ்.சற்குணராசா கலந்துகொள்ளவுள்ளார். (ச-159)

## நினைவுக்கல் பெயர் பொறிக்க வலி. மேற்கு சபையில் மோதல்!

யாழ்ப்பாணம், ஒக்.29
வலிகாமம் மேற்கு பிரதேசசபையின் ஆளுகைக்கு உட்பட்ட சுழிபுரம் சத்தியக்காட்டு சந்தையின் கட்டடத் தொகுதி நினைவுக் கல்லில் யாருடைய பெயரைப் பொறிப்பது என்பது தொடர்பில் சபை அமர்வில் வாதப் பிரதிவாதங்கள் இடம்பெற்றன.
சபையின் அமர்வு நேற்றுமுன்தினம் நடைபெற்ற நிலையில், சபையின் தீர்மானத்தை மீறி தவிசாளர் நடனேந்திரன் செயற்படுகின்றார் என்று குற்றஞ்சாட்டி தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் உறுப்பினர் இதயகுமாரன் சபை அமர்வில் இருந்து வெளிநடப்புச் செய்தார்.
சபையின் கடந்த அமர்வின்பொழுது சுழிபுரம் சத்தியக்காடு பொதுச் சந்தை நினைவுக்கல்வெட்டில் யாருடைய பெயரைப் பொறிப்பது எனப் பல வாதப்பிரதி வாதங்கள் இடம்பெற்றன. முடிவில், "தவிசாளராலும், உறுப்பினர்களாலும் திறந்து வைக்கப்பட்டது" எனப் பொறிக்க தீர்மானிக்கப்பட்டது.
இந்தநிலையில் நேற்றுமுன்தினம் சபையில் கருத்துத் தெரிவித்த உறுப்பினர் சிவகுருபாலகிருஷ்ணன் சபையிலே தீர்மானமெடுத்த பின் தவிசாளர் தனதுப் பெயரை பொறிக்க கல்வெட்டில் இடமளித்துள்ளார். அதையறிந்த நான் சபை தீர்மானத்தை மீறுகின்றார் என்று கருதி தவிசாளருக்கு இவ்வாறு செய்ய வேண்டாம் எனத் தெரிவித்து நிறுத்தினேன் என்று தெரிவித்தார்.
அங்கு கருத்துத் தெரிவித்த உறுப்பினர் குணசிறி தற்பொழுது சபையின் உறுப்பினர்கள் அனைவருடைய பெயரையும் பொறிக்க இணக்கம் காணப்படுகிறது. அதனால் இந்த விடயத்தை வாக்கெடுப்புக்கு விடவேண்டும் என்று தெரிவித்தார். அங்கு கருத்துத் தெரிவித்த உறுப்பினர் பொன்ராசா, சந்தை திறப்பு விழாவிலே கல்வெட்டுப் பதிக்கப்படவேண்டும். வரலாறு தொடரவேண்டும். ஆனால் சபையிலிருந்து நீங்கிய பிரதிநிதியின் பெயர் குறிப்பிடமுடியாது. அவருக்குப் பதிலீடாக இருக்கக்கூடியவரின் பெயரைப் பொறிக்க ஆமோதிக்கின்றேன் என்று தெரிவித்தார்.
சபையில் கருத்துத் தெரிவித்த உறுப்பினர் ஜெயந்தன், சபையிலிருந்து நீங்கிச் சென்றாலும் தனது தள்ளாடும் வயதிலும் அந்த உறுப்பினர் அடிக்கல் நாட்டு விழாவுக்கு வந்திருந்தார். அவரது பெயரை இடாவிட்டால் எனது பெயரையும் இடவேண்டாம் எனத் தெரிவித்தார்.
அங்கு கருத்துத் தெரிவித்த சபையின் உறுப்பினர் இதயகுமாரன் இந்த சபை தொடர்ச்சியாக ஏமாற்று வேலைகளையே செய்து வருகிறது. சபையில் தீர்மானமெடுத்ததற்கு மேலாக தவிசாளர் தனது பெயரைப் பொறிக்க முற்பட்டுள்ளார். என்னிடம் கடந்த தீர்மான அறிக்கை மற்றும் குரல் பதிவு உள்ளது. அதை சபைக்கு இட்டுக் காட்டினாலே எனது பெயரைப் பொறிக்க அனுமதிப்பேன் - என்றார்.
கடந்த கூட்ட ஒலிப்பதிவைச் சபைக்கு இட்டுக் காட்டவேண்டும் என்றும், பிழையை ஒப்புக் கொள்ளவேண்டும் என்றும் தொடர்ச்சியாக சபையின் உறுப்பினர் இதயகுமாரன் வலியுறுத்திய நிலையில் ஏனைய உறுப்பினர்கள் ஒலிப்பதிவை கோரவில்லை எனத் தெரிவித்த தவிசாளர் அதை சபையில் ஒலிக்கவிட முடி யாது எனத் தெரிவித்தார். தனது சிறப்புரிமையை தவிசாளரும், ஏனைய உறுப்பினர்களும் ஏற்றுக் கொள்ளவில்லை என்று தெரிவித்து சபையின் அனைத்து நடவடிக்கைகளில் இருந்து விலகுகின்றேன் என்றும், பதவி விலகுகின்றேன் என்றும் தெரிவித்து சபையிலிருந்து இதயகுமாரன் விலகிச் சென்றார்.
அதையடுத்து 13 பேருக்கு மேல் கோரம் இருந்தால் கூட்டத்தை நடாத்தலாம் எனத் தெரிவித்த தவிசாளர் இதயகுமாரனின் பெயரின்றி கல்வெட்டை பொறிப்பது என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவித்தார்.
அதேவேளை, நினைவுக் கல்லில் பெயர் பொறிப்பது தொடர்பாக இரு சபை அமர்வுகளில் வாதம் நடத்தி நேரத்தையும், பணத்தையும் வீணடிக்கின்றார்கள் என்று பொதுமக்கள் தரப்பில் விசனம் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஏ-125)

## கடிதங்களை தீக்கிரையாக்கி மக்கள் போராட்டம்

வவுனியா, ஒக். 29
காணாமலாக்கப்பட்டோர் தொடர்பான அலுவலகத்தால் அனுப்பப்பட்ட கடிதங்கள், காணாமலாக்கப்பட்டோரின் உறவுகளால் தீக்கிரையாக்கப்பட்டன.
காணாமலாக்கப்பட்ட தமது உறவுகளுக்கு நீதி கோரி காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளால் வவுனியா ஏ-9 வீதியில் வீதி அபிவிருத்தி அதிகார சபை முன்பாக முன்னெடுக்கப்பட்டுவரும் போராட்டம் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமையும் முன்னெடுக்கப்பட்டது.
போராட்டத்தில் ஈடுபட்டுள்ள காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளுக்கு, காணாமலாக்கப்பட்ட தொடர்பான அலுவலகத்தால் காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான மேலதிக விவரங்கள் கோரி கடிதம் அனுப்பப்பட்டது.



அதன்போதே காணாமலாக்கப்பட்டோர் அலுவலகத்தை தாம் நிராகரிக்கின்றோம், அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் உள்ளிட்ட சர்வதேச தலையீட்டின் மூலமே காணாமல் ஆக்கப்பட்ட தமது உறவுகளுக்கு நீதி கிடைக்கும் எனவும் தெரிவித்து கடிதங்களை கிழித்து தீக்கிரையாக்கினர். (ஒ-14,இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்கோணேச்சர ஆலய ஆக்கிரமிப்பை நிறுத்துக!

## வலி.மேற்கு சபையில் கண்டனத் தீர்மானம்

**யாழ்ப்பாணம், ஒக். 29**

**பஞ்ச ஈச்சரங்களில் ஒன்றான திருக்கோணச்சர ஆலய சுற்றுச்சூழலிலுள்ள வரலாற்று அடையாளங்களை அழித்து மேற்கொள்ளப்படும் ஆக்கிமிரப்பை கண்டித்து வலி.மேற்கு பிரதேசசபையில் கண்டனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.**

வலி. மேற்கு பிரதேசசபையின் 56ஆவது அமர்வு நேற்றுமுன்தினம் பிரதேசசபை மண்டபத்தில் வலி. மேற்கு பிரதேசசபையின் தவிசாளர் தர்மலிங்கம் நடனேந்திரன் தலைமையில் நடைபெற்றது. இதன்போது பஞ்ச ஈச்சரங்களில் ஒன்றான திருக்கோணேச்சர ஆலயச் சுற்றுச்சூழல் மிக மோசமாக கபளீகரம் செய்யப்படுகின்றது. தமிழர்களுடைய தாயகப் பகுதிகளிலுள்ள பாரம்பரியங்களை அழிக்க தொல்பொருள் திணைக்களம் முனைந்து செயற்படுகின்றது. இது நிறுத்தப்பட வேண்டும்.

திருக்கோணச்சர ஆலயத்தில் தமிழ் வரலாற்று அடையாளங்கள், எச்சங்கள் அழிக்கப்படுகின்றன. இவை தடுக்கப்பட வேண்டும் எனக் குறிப்பிட்டு தவிசாளர் சபையில் பிரேரணையை முன்மொழிந்தார். சபை உறுப்பினர்கள் ஆதரவளித்த நிலையில் பிரேரணை ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

இந்தக் கண்டனத் தீர்மானம் பிரதமர், தொல்லியல் திணைக்களத்துக்கு பொறுப்பான அமைச்சர், சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு அனுப்பி வைக்கப்படும் எனத் தவிசாளர் தெரிவித்தார். (ச-27)



## மெய்கண்டார் குருபூசை தினம் யாழ்.பல்கலையில் முன்னெடுப்பு

யாழ்ப்பாணம், ஒக். 29

மெய்கண்டார் குருபூசை தினம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கைலாசபதி கலையரங்கில் கடந்த புதன்கிழமை முன்னெடுக்கப்பட்டது. பல்கலைக்கழகத்தின் சைவ சித்தாந்தத்துறை உயர்பட்டபடிப்புக்கள் பீடமும் சைவசித்தாந்த முதுமாணி கற்கை அணி மாணவர்களும் இணைந்து மெய்கண்டார் குருபூசை தினத்தை ஏற்பாடு செய்தனர். இதன்போது பல்கலைக்கழக மாணவர்களால் மெய்கண்டாரின் வரலாற்றைப் புலப்படுத்துமுகமான வில்லிசை, நாடகம், பட்டிமன்றம் போன்ற கலைநிகழ்வுகளும் நடத்தப்பட்டன.

யாழ்.பல்கலைக்கழகத்தின் சைவசித்தாந்த துறைத் தலைவர் பொன்னுத்துரை சந்திரசேகரன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில், நல்லை ஆதீன குரு முதல்வர், முன்னாள் துணைவேந்தர் பாலசுந்தரம் பிள்ளை உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். (ஒ-14-125)

## கலாபூஷண விருதுக்கு விண்ணப்பம் கோரல்

சாவகச்சேரி ஒக்.29

மத்திய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் 38 ஆவது கலாபூஷண விருது 2022 இற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. அதற்கமைய 60 வயதைப் பூர்த்தி செய்யும் கலாபூஷண விருதுக்கு விண்ணப்பிக்க விரும்பும் தென்மராட்சி பிரதேசத்தைச் சேர்ந்த தகைமையுடைய கலைஞர்கள், பிரதேச கலாசார அலகில் உரிய விண்ணப்பப் படிவத்தைப்பெற்று எதிர்வரும் நவம்பர் மாதம் 5 ஆம் திகதிக்கு முன்னர் கையளிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-14)



உலக வங்கி பிரதேச அபிவிருத்தி உதவித்திட்ட நிதிப்பங்களிப்பின் கீழ் யாழ்.மாநகரசபையால் நிர்மாணிக்கப்பட்ட 'செங்குந்தா சதுக்கம்' கடைத் தொகுதி யாழ்.மாநகரசபை முதல்வர் விஸ்வலிங்கம் மணிவண்ணனால் கடந்த வியாழக்கிழமை திறந்து வைக்கப்பட்டது. (ஒ-14-27)

## பயிற்சி நிறைவுசெய்தோருக்கு சான்றிதழ் வழங்கும் நிகழ்வு

கிளிநொச்சி, ஒக். 29

கிளிநொச்சி தேசிய பயிலுநர் கைத்தொழிற்பயிற்சி அதிகாரசபையில் பயிற்சியை நிறைவுசெய்த பயிலுநருக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு, கிளிநொச்சி தேசிய பயிலுநர் கைத்தொழிற் பயிற்சி அதிகார சபையின் மாநாட்டு மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது.

நிகழ்வில் தேசிய பயிலுநர் கைத்தொழிற்பயிற்சி அதிகாரசபையின் தலைவர் கலந்துகொண்டு பயிற்சியை நிறைவு செய்த 48 பேருக்கு சான்றிதழ்களை வழங்கினார். (ஒ-14-113)

## இணைப்பு வீதியின் புனரமைப்பு விரைவில்

வரணி இடைக்குறிச்சி ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாசாலை வரணி மருத்துவமனை இணைப்பு வீதியின் புனரமைப்புப் பணிகள் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன.தகவல் அறியும் உரிமைச்சட்டத்துக்கு அமைவாக வீதி அபிவிருத்தி அதிகாரசபையிடம் வினவிய போது, வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் ஒருங்கிணைந்த வீதி அபிவிருத்தித் திட்டப் பணிப்பாளர் சி.வதனகுமார் தெரிவித்துள்ளதாவது,

வரணி இடைக்குறிச்சி ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாசாலை வரணி மருத்துவமனை இணைப்பு வீதியானது, "ஐ" வீதித் திட்டத்தில் யாழ்.மாவட்டத்தில் மூன்றாவது ஒப்பந்தப் பொதியினுள் அமையப் பெற்ற வீதியாகும். இந்தத் திட்டத்தின் நடவடிக்கைகள் கொரோனாத் தொற்று மற்றும் நாட்டின் தற்போதைய பொருளாதார நெருக்கடி போன்றவற்றால் பின்னடைவை சந்தித்திருந்தன. இதனால் மேற்குறித்த வீதியின் புனரமைப்பு நடவடிக்கைகளை ஆரம்பிக்க முடியவில்லை. தற்போது இந்த வீதியின் புனரமைப்புப் பணியை ஆரம்பிக்கத் தேவையான நடவடிக்கைகளை "ஐ" திட்டம் மேற்கொண்டு வருகின்றது - என்றார். (ஒ-14)

## இன்றைய நாள் (ராசிபலன்)

**மேடம்:** புதிய முயற்சிகளில் ஈடுபடுவதைத் தவிர்க்கவும். உறவினர்களாலும் நண்பர்களாலும் அலைச்சலும் செலவுகளும் ஏற்படும். தந்தை வழி உறவினர்களால் சில பிரச்சினைகள் ஏற்பட்டு நீங்கும்.

**இடபம்:** மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். தாய்வழி உறவினர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். சிலருக்கு புதிய நண்பர்களின் அறிமுகம் ஏற்படும்.

**மிதுனம்:** எதிர்பார்த்த பணம் கைக்குக் கிடைக்கும். வீட்டில் உள்ளவர்கள் உங்கள் ஆலோசனையைக் கேட்டுச் செயற்படுவார்கள். பலநாள் கனவு ஒன்று நிறைவேறும்.

**கடகம்:** உற்சாகமான நாள். புதிய முயற்சிகள் வெற்றிகரமாக நிறைவேறும். எதிரிகளால் ஏற்பட்ட தொல்லைகள் நீங்கும். வியாபாரத்தில் திடீர் செலவுகளும், பணியாளர்களால் வீண் பிரச்சினைகளும் ஏற்படக்கூடும்.

**சிம்மம்:** முக்கிய முடிவு எடுப்பதைத் தவிர்ப்பது நல்லது. மனதில்தேவையற்ற குழப்பம் ஏற்பட்டு நீங்கும். உறவினர்கள் வகையில் தேவையற்ற பிரச்சினை ஏற்படும் என்பதால் பொறுமை அவசியம்.

**கன்னி:** தேவையான பணம் கிடைக்கும். சகோதரர்கள் பணம் கேட்டு நச்சரிப்பார்கள். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு. தாயின் உடல் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்தவும்.

**துலாம்:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும். ஆனால், குடும்பம் தொடர்பான முக்கிய முடிவுகள் எதையும் எடுக்கவேண்டாம். பிள்ளைகள் பிடிவாதம் பிடிப்பார்கள். அனுசரித்துச் செல்வது நல்லது.

**விருச்சிகம்:** சகோதர வகையில் எதிர்பார்த்த காரியம் இழுபறியாகும். சிலருக்கு வீண் செலவுகள் ஏற்படும். கணவன் – மனைவிக்கிடையே சிறு சிறு விவாதங்கள் ஏற்படக்கூடும் என்பதால் பொறுமை அவசியம்.

**தனுசு:** குடும்பத்தில் சிறுசிறு சலசலப்பு ஏற்பட்டாலும், சமயோசிதமாக சமாளித்து விடுவீர்கள். தேவையான பணம் கையில் இருந்தாலும் எதிர்பாராத செலவுகளும் ஏற்படக்கூடும்.

**மகரம்:** மனதில் தைரியமும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும். தொடங்கும் காரியம் அனுகூலமாக முடியும். வாழ்க்கைத்துணையால் மகிழ்ச்சி உண்டாகும் உங்களுடைய முயற்சிகளுக்கு குடும்பத்தினரின் ஆதரவு கிடைக்கும்.

**கும்பம்:** எதிரிகளின் சூழ்ச்சிகளை முறியடிப்பீர்கள். சகோதர வகையில் எதிர்பார்த்த காரியம் இழுபறிக்குப் பிறகுதான் முடியும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு.

**மீனம்:** காரியங்கள் அனுகூலமாக முடியும். அதிகப்படியான செலவுகள் ஏற்பட்டாலும் சமாளித்துவிடுவீர்கள். தந்தையிடம் எதிர்பார்த்த பண உதவி கிடைக்கும். சகோதரர்களால் வீண் செலவுகள் ஏற்படக்கூடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## கணக்குப்பிள்ளைகளின் தீர்ப்புகள்

'கணக்குப்பிள்ளை பேசக் கூடாது. கணக்குப்புத்தகம் பேச வேண்டும்' என்று தமிழில் ஒரு முதுமொழி உண்டு. ஆனால் இலங்கையைப் பொறுத்தவரையில் கணக்குப்புத்தகம் பேசுவதில்லை. கணக்குப்பிள்ளைகள் தான் தங்களுக்குத் தகுந்தவாறு பேசிக்கொண்டிருக்கின்றார்கள். இதனால்தான் இந்த நாடு இன்றுவரையில் உருப்படாமல் இருக்கின்றது.

'இறுதிப்போரின்போது இராணுவத்தினரிடம் சரணடைந்த எவரும் காணாமல் ஆக்கப்படவில்லை. அவர்கள் காணாமல் ஆக்கப்பட்டார்கள் என்பதற்கு ஆதாரமும் இல்லை' என்று காணாமல் ஆக்கப்பட்டோர் பணியகத்தின் தலைவர் மகேஷ் கட்டுலந்த தெரிவித்துள்ளார். அத்துடன் தமிழ் மக்கள் எவரும் இறுதிப்போரில் 'இனப்படுகொலை' செய்யப்படவில்லை என்றும் குறிப்பிட்டுள்ளார்.

காணாமல் ஆக்கப்பட்டோர் பணியகத்தை பாதிக்கப்பட்ட மக்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. தமது விடயத்தில் சர்வதேச விசாரணை ஊடாகவே நியாயமான – நீதியான தீர்வைப் பெற்றுக்கொள்ள முடியும் என்று நம்புகின்றார்கள். அவர்கள் நம்புவது சரியானது என்பதைத்தான் காணாமல் ஆக்கப்பட்டோர் பணியகத் தலைவர் உறுதிப்படுத்துகின்றார்.

காணாமல் ஆக்கப்பட்டோர் பணியகத்தின் தலைவராக இருந்துகொண்டு, இறுதிப்போரின் இறுதிக் கட்டத்தில் இராணுவத்தினரிடம் சரணடைந்த எவரும் காணாமல் ஆக்கப்படவில்லை என்று எந்த விசாரணைகளின் அடிப்படையில் அவர் கூறுகின்றார் என்ற கேள்வி எழுகின்றது. இதற்கான ஆதாரங்கள் எவையும் இல்லை என்றும் அவர் கூறுகின்றார்.

காணாமல் ஆக்கப்பட்டோரைக் கண்டறியும் ஆணைக்குழு முன்னாள் ஜனாதிபதி மஹிந்த காலத்தில் நியமிக்கப்பட்டது. வடக்கு – கிழக்கு உள்ளிட்ட நாட்டின் பல்வேறு பகுதிகளுக்கும் நேரில் சென்று விசாரணைகளை மேற்கொண்டது.

இறுதிக்கட்டப் போரின் இறுதியில் இராணுவத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பில் பலரும் சாட்சியமளித்திருந்தனர். இராணுவத்தினரின் அடையாளங்களைக் கூறி, எப்போது, எத்தனை மணியளவில், யார் யார் கூட இருக்கும் நிலையில் தமது இரத்த உரித்துக்களை கையளித்தோம் என்று விலாவாரியாக வாக்குமூலங்கள் வழங்கியிருந்தார்கள்.

இந்தச் சாட்சியங்கள் தொடர்பில் எப்போது விசாரணை நடந்தது? யார் விசாரணை நடத்தியது?

மேலும், போரின் இறுதிக் கட்டத்தில் படையினரிடம் நேரடியாகக் கையளிக்கப்பட்டவர்களை காணவில்லை என்பதற்காக ஆள்கொணர்வு மனுவும் பாதிக்கப்பட்டவர்களால் தாக்கல் செய்யப்பட்டிருந்தது. இந்த விசாரணைகளின்போது படையினரிடம் கையளிக்கப்பட்டவர்கள் தொடர்பான விவரங்கள் இராணுவத்தினரிடம் இருப்பதாக முல்லைத்தீவு நீதிமன்ற விசாரணையின்போது இராணுவ அதிகாரி சாட்சியமும் அளித்திருந்தார்.

அப்படியொரு சம்பவம் நடக்கவேயில்லை என்றும் அதற்கு ஆதாரங்கள் இல்லை என்றும் கூறும் பணியகத்தின் தலைவர், இந்தச் சாட்சியங்களுக்கு என்ன நடந்தது என்பதையும் வெளிப்படுத்தவேண்டும்.

இந்த நாட்டின் உள்நாட்டுப் பொறிமுறை எப்படி இருக்கப் போகின்றது என்பதற்கு பணியகத் தலைவரின் கூற்று ஆகப் பிந்திய மிகப் பொருத்தமான உதாரணம்.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இலங்கை தொடர்பில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டபோது அதை முரட்டுத்தனமாக வெளிவிவகார அமைச்சர் அலிசப்ரி எதிர்த்திருந்தார். உள்நாட்டுப் பொறிமுறை ஊடாகவே நீதி நிலைநாட்டப்படும் என்றும் அழுத்தியுரைத்திருந்தார்.


ஆனால், இலங்கையில் பாதிக்கப்பட்ட தமிழ்மக்கள் விடயத்தில், தீர்ப்பு எழுதப்பட்ட பின்னர் அந்தத் தீர்ப்பை அடையக் கூடிய வகையில்தான் விசாரணைகள் அமையும் என்பதை காணாமல் ஆக்கப்பட்டோர் பணியகத்தின் தலைவர் எடுத்தியம்பியிருக்கின்றார்.

தமிழ்மக்கள் உள்நாட்டுப் பொறிமுறை மீது நம்பிக்கை வைக்காமைக்கு பல ஆயிரம் நியாயப்பாடுகள் உள்ளன. நீதி நிலை நாட்டப்படுவது மாத்திரமல்ல. அது நிலை நாட்டப்படுவதுபோன்றாவது காட்டப்படவேண்டும். ஆனால், இங்கே அதுவும் இல்லை. தமிழ்மக்கள் கோரும் சர்வதேச விசாரணையின்றி இலங்கையில் தமிழர்களுக்கு நீதி கிடைக்கும் என்பது சூரியன் மேற்கே உதிப்பதற்குச் சமம்.

### நாளொரு நல்வார்த்தை

"அஞ்சி நடுங்கிக் கொண்டிருப்பவனால் சிறிய குட்டையைக் கூடக் கடக்க முடியாது"

- சாணக்கியன்




# ஒருமித்த நாடு என்ற போலிமுகத்தினுள் ஒற்றையாட்சியை திணிக்கவே முயற்சி!

## எச்சரிக்கின்றார் கஜேந்திரகுமார் எம்.பி.

**யாழ்ப்பாணம், ஒக். 29**

**இலங்கை அரசாங்கம் தமிழ் மக்களுக்கு நியாயமான தீர்வை வழங்காது என்ற எண்ணம் சர்வதேச சமூகத்தின் மத்தியில் எழுந்துள்ள சூழலில், புதிய அரசமைப்பு ஊடாக ஒருமித்த நாடு என்ற போலிமுகத்தினுள் ஒற்றையாட்சி அரசமைப்பை ஏற்றுக்கொள்ள வைப்பதற்கான நடவடிக்கைகளே இடம்பெறப்போகின்றன என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.**

புதிய அரசமைப்பு ஒரு வருடத்துக்குள் உருவாக்கப்படும் எனவும் அதன் ஊடாக அரசியல் தீர்வு எட்டப்படும் என்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்திருந்தார். இதனை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வரவேற்றிருந்தது. இந்த விடயங்கள் தொடர்பில் விளக்கமளிக்கும் செய்தியாளர் சந்திப்பிலேயே முன்னணியின் தலைவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஒரு அதிகாரப் பகிர்வுக்கோ அல்லது தமிழ்த் தேசத்தின் அங்கீகாரத்துக்கோ எந்தவிதத்திலும் இடமளிக்காத வகையில்தான் நல்லாட்சி அரசின் காலத்தில் இடைக்கால அறிக்கை தயாரிக்கப்பட்டிருந்தது. இவ்வாறு தயாரிக்கப்பட்ட முறையைத்தான் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன், ஜனாதிபதி ரணில் கொண்டு வரவேண்டும் எனக் கூறியுள்ளார்.

தமிழ்மக்களின் உரிமைப் போராட்டம் 35 வருட காலமாக ஒரு இலட்சத்துக்கும் மேலான மக்கள் தங்கள் உயிர்களைத் தியாகம் செய்து இந்த ஒற்றையாட்சி அரசமைப்பை நிராகரித்து வந்திருக்கிறார்கள். இந்த ஒற்றையாட்சி சுமந்திரன் விரும்புகின்ற ஒருமித்த நாடு என்ற போலி முகத்துடன் கொண்டு வருவதாக இருந்தாலோ அல்லது இந்தியா எம் மீது திணிக்க விரும்புகின்ற 13 ஆவது திருத்தமாக இருந்தாலோ எதுவாக இருந்தாலும் ஏற்றுக் கொள்ளமுடியாது. தற்போது சிங்கள பௌத்த பேரினவாதம் தமிழ் மக்களுக்கு ஒரு நியாயமான தீர்வைக் கொடுக்கப்போவதில்லை என்பதை நன்கறியக் கூடிய வகையில் சர்வதேச சமூகத்தின் பார்வை இலங்கை மீதிருக்கின்றது.

இந்தச் சூழ்நிலையில் தேர்தல் காலத்தில் சமஷ்டி என்றும், சுயநிர்ணய உரிமை என்றும் கூறி மக்களிடமிருந்து வாக்குப் பெற்றவர்கள் தற்போது 13 ஆவது திருத்தம் என்றும், ஒருமித்த நாடு எனும் போலி ஒற்றையாட்சி அரசமைப்புத் திட்டத்தையும் காட்டித் தமிழ் மக்கள் விரும்பி அடிமைகளாகப் போவதற்கான செயற்பாடுகளை ஒருபோதும் நாங்கள் ஏற்றுக் கொள்ளமுடியாது.

தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி தவிர்ந்த தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஏனைய அனைத்துத் தரப்புக்களும் தமிழ் மக்களிடம் பொய் கூறி வாக்குகளைப் பெற்றுத் தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு எந்தளவுக்குத் தமிழ் மக்களின் நம்பிக்கைகளுக்குத் துரோகம் செய்கிறார்கள் என்பதை நாம் நன்றாக உணர்ந்து கொள்ளவேண்டும்.

பூகோள அரசியலின் அடிப்படையில்தான் அனைத்துத் தீர்மானங்களும் எடுக்கப்படுகின்றன, எவருமே பூகோள அரசியல் தொடர்பில் கதைக்காத நிலையில் நாம் கடந்த 13 வருடங்களாக கூறி வந்தோம்.

இங்கே சீனாவின் ஆதிக்கத்துக்கும், மேற்குலக நாடுகளின் ஆதிக்கத்துக்கும், இந்தியாவின் ஆதிக்கத்துக்கும் இடையிலான போட்டி தான் எனக் கூறியபோது எங்களைக் கேலி பண்ணினார்கள், அவமானப்படுத்தினார்கள். ஆனால், இன்று பூகோள அரசியலைப் பற்றித்தான் கதைக்கின்றார்கள் - என்றார். (ஓ-26)

**நாளை** 30.10.2022 ஞாயிற்றுக்கிழமை ஐப்பசி 13

சுபநேரம் : 09.03 - 10.33
ராகுகாலம்: 04.33 - 06.03
கந்தஷஷ்டி விரதம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## The Vembadi Girls' High School Old Girls' Association

It has been decided to hold the Annual General Meeting on 4th December 2022. Time and venue will be notified later. Any suggestions for amendment to the constitution should be submitted through email address *voga.jaffna1913@gmail.com* **on or before 10th November 2022.**

In the facebook of the Association, https://www.facebook.com/VOGAJaffna you can view

(a). the history of the OGA &

(b). Constitution of the OGA

Mrs.S.Sivathas
**Secretary.**

(cs.21408)(2.6)


## மரண அறிவித்தல்



அருட்சகோதரி

### அல்போன்ஸ் மேரி குருஸ் தி.கு

பேசாலை, மன்னாரைப் பிறப்பிடமாகவும் யாழ். திருக்குடும்ப சபையைச் சேர்ந்தவருமான அருட்சகோதரி அல்போன்ஸ் மேரி குருஸ் தி.கு நேற்று (28.10.2022) வெள்ளிக்கிழமை இறைபதம் இணைந்துவிட்டார்.

அன்னாரின் இறுதிச்சடங்கு இன்று (29.10.2022) சனிக் கிழமை பி.ப 3.00 மணிக்கு புனித மரியன்னை பேராலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்ட பின்னர், யாழ். கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

**121, பிரதான வீதி,**
**யாழ்ப்பாணம்.**

தகவல்:
அருட்சகோதரி தியோவ்வின் குருஸ்
மாகாணத் தலைவி.

## மரண அறிவித்தல்

தோற்றம்
31 . 12 . 1968



மறைவு
27 . 10 . 2022

### திரு. இரத்தினம் தவேந்திரன்

யாழ்ப்பாணம், கைதடி-நுணாவிலைப் பிறப்பிடமாகவும், இத்தாலியை வசிப்பிடமாகவும் கொண்ட திரு.இரத்தினம் தவேந்திரன் 27.10.2022 வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற இரத்தினம் அன்னபூரணம் தம்பதியரின் அன்பு மகனும், மனோசாந்தியின் (சுவிஸ்), அன்புக் கணவரும், சந்தோஸ் (சுவிஸ்), திரவிணா (சுவிஸ்), கஜனி (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற தங்கரத்தினம் தர்மகோகிலம், தர்மராசா, தவராசா ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் திங்கட்கிழமை 31.10.2022 இத்தாலியில் நடைபெற்று பூதவுடல் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**குடும்பத்தினர்.**

# 128 கோடி ரூபா திலினியால் மோசடி

கொழும்பு,ஒக். 29 திலினி பிரியமாலினி குறித்து இதுவரை கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளுக்கமைய அவர் 128 கோடி ரூபாவுக்கு மேல் மோசடி செய்துள்ளார் என்பது தெரியவந்துள்ளது என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடகசந்திப்பில் பொலிஸ் ஊடகப்பேச்சாளர் மூத்த பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்;

விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள திலினி பிரியமாலிக்கு எதிராக 12 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன.தமிழ் அரசியல்வாதிகள் எவருடனும் தொடர்பில் இருக்கவில்லை.

திலினியின் வலையில் சிங்கள, முஸ்லிம் அரசியல்வாதிகள், கலைஞர்கள், வியாபாரிகள் எனப் பலரும் சிக்கி பல கோடி ரூபாவை இழந்துள்ளனர் எனத் தெரியவந்துள்ளது. இவை தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப் பட்டு வருகின்றன.

விசாரணைகளின் அடிப்படையில் அவர் 128 கோடி ரூபாவுக்கும் மேல் பணமோசடி செய்துள்ளார் - என்றார்.

இதேவேளை பல கோடி ரூபா நிதிமோசடிக் குற்றச்சாட்டில் கடந்த 6 ஆம் திகதி கைது செய்யப்பட்ட திலினி, நவம்பர் 2 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத் தக்கது.

(ச-இ)


## காரைநகர் அபிவிருத்திச் சபையின் விஷேட பொதுக்கூட்டம்

- **இடம் :- சைவமகாசபை, மணற்காடு, காரைநகர்.**
- **காலம் :- 06.11.2022 ஞாயிற்றுக்கிழமை**
- **நேரம் :- முற்பகல் 10.00 மணி**
- **தலைமை :- திரு. இ.சிவசுப்பிரமணியம்**

**குறிப்பு:**

02.10.2022 ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற பொதுக்கூட்டத்தின் தீர்மானத்தின்படி புதிய யாப்பு விதிகளை ஆயுட்கால அங்கத்தவர்கள் அங்கீகரித்தல் தொடர்பான விஷேட பொதுக்கூட்டம் நடைபெற இருப்பதால் 02.10.2022 இற்கு முன் இணைந்த சபையின் ஆயுட்கால அங்கத்தவர்கள் அனைவரையும் தவறாது சமுகம் தருமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

**சுப்பிரமணியம் செந்தூரன்**
**செயலாளர்.**

(cs.21412) (2.6)

## UNIVERSITY OF JAFFNA, SRI LANKA
## VACANCY FOR THE POST OF MANAGEMENT ASSISTANT (ON CONTRACT)

The University of Jaffna, Sri Lanka will entertain applications for the under-mentioned post from suitably qualified persons up to **11.11.2022.**

**1. Management Assistant – (ON CONTRACT)**

**REQUIRED QUALIFICATIONS AND EXPERIENCE**

1. Should have passed G.C.E (Ordinary Level) Examination in six subjects at **One Sitting** with credit passes in
   i) Sinhala/ Tamil
   ii) English Language/ English Literature
   iii) Mathematics

   **AND**
2. Should have Pass in all subjects at G.C.E.(Advance Level) examination (except the common general paper) at **One Sitting** (Passing in 3 subjects under the old syllabus at one sitting would be sufficient)
3. Preference will be given to those who possess the following;
   a. Fluency in English
   b. An acceptable qualification in computer applications of not less than six (06) months duration obtained from recognized institutes.
   c. Two years of experience in the use of computer application packages.
4. Should be not less than 18 years and not more than 30 years of age on the closing date of the application.

**REMUNERATION AND OTHER CONDITIONS**

- A monthly payment of Rs. 36,900 (fixed)
- This appointment is on fulltime contract basis for a period of six months, extendable as per need.

**HOW TO APPLY:**

Applications should be on **specified form** issued by the University. Application Form and other particulars for the above posts can be **downloaded only from the University website - www.jfn.ac.lk.**

Applicants should deposit the Application Fee of Rs.100.00 at any branch of the People's Bank in favour of **University of Jaffna** Collection Account Number: **970 0000 9000 0387**. A copy of the Bank Deposit Slip should be attached with the application as the proof of the payment of Application Fee.

All the Educational/Professional qualifications and experience obtained as at the closing date of the applications will only be considered when evaluating the candidates. Application without the copy of the supportive documents for Educational/Professional and Experience will be rejected.

The envelope containing the duly filled application form must bear title of the post which you are applied for on its top left hand corner and send under registered post to reach us on or before **11.11.2022** to the following address.

**Assistant Registrar**
**Faculty of Graduates Studies,**
**University of Jaffna**
**Palaly Road,**
**Thirunelvely,**
**Jaffna**

Applicants from Government Departments, State Corporations and Statutory Bodies should apply through their Heads of respective Institutions. Advance copies of applications may be sent in the first instance. However, no such applicant will be considered for appointment if the application routed through the Head of Department is not received.

Incomplete and illegible applications and applications that are received after the closing date will be rejected without intimation.

For further details please refer the university website **www.jfn.ac.lk**

**REGISTRAR**
**28.10.2022**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



ஜனனம்
30 - 01 - 1936

மரணம்
29 - 09 - 2022

அமரர்

## வைத்தியலிங்கம் சுப்பிரமணியம் (துரை)

" நிஜம் என்பதைத் தொலைத்தாலும் - என்றும்
நிழலாய் தொடரும் உங்கள் நினைவு..."

சாவகச்சேரி - மீசாலை வடக்கைப் பிறப்பிடமாகவும் கனடா ரொரன்டோவை வசிப்பிடமாகவும் கொண்ட எங்கள் குடும்பத்தலைவர் அமரர்.வைத்தியலிங்கம் சுப்பிரமணியம் அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று ( 29.10.2022) கனடாவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் என்பதை அனைவருக்கும் அறியத்தருவதுடன், அன்னார் இறைபதமடைந்த செய்தி கேட்டு நாம் துயருற்று இருந்த வேளையில் நேரில் வந்தும், தொலைபேசியூடாகவும், முகநூல், மின்னஞ்சல், RIPBOOK ஆகியவை மூலமாகவும், எமக்கு ஆறுதல் கூறி அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், மலர்வளையங்கள், மலர்மாலைகள் சாத்தியவர்களுக்கும், உற்றார், உறவினர், நண்பர்கள் மற்றும் இன்றுவரை எமக்கு சகல உதவிகளையும் செய்த அன்பு நெஞ்சங்களுக்கும் எமது குடும்பத்தின் சார்பாக இதயபூர்வமான நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றோம்.

உதயன் (மகன் - 416 806 6526)
கண்ணன் (மகன் - 416 433 5392)
பாரதி (மகன்) - 416 854 4813)
ராஜிவ் (மகன்) - 647 239 6406)

பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த (30.09.2022) வெள்ளிக்கிழமை
இறைவனடி சேர்ந்த
எங்கள் குடும்பத் தலைவர்

## அமரர்
## அருணாசலம் பேரம்பலம்

அவர்களின் அந்தியேட்டி வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் நாளை (30.10.2022) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும்.
அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் பங்குபற்றுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

காடிவளை,
இளவாலை.


குடும்பத்தினர்.

(cs.21407) (2.6)

# 10 ஆம் ஆண்டு நீங்கா நினைவுகளுடன்...

நானே (இயேசு) உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன்
என்னை விசுவாசிக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான்.
யோவான் : 11.25

தோற்றம்
05 • 06 • 1952



மறைவு
29 • 10 • 2012

1952 –2012

## அமரர் நாகலிங்கம் துரைசிங்கம்

அப்பா!

பத்து ஆண்டுகள் கடந்தாலும்
உங்கள் அன்பான பேச்சும்
கனிவான முகமும் பசுமையான
நினைவுகளாய் எம் உள்ளத்தில்
என்றென்றும் நிலைத்திருக்கின்றது.

11, இராணி லேன்,
நயன்மார்கட்டு,
நல்லூர்.

என்றும் உங்கள் நீங்கா நினைவுகளுடன்
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

# அறிவித்தல்

## கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றிலே

மக்கள் வங்கி
இல.75 சேர் சிற்றம்பலம் ஏ. கார்டினர் மாவத்தை
கொழும்பு - 02

வழக்காளி

வழக்கு இல : M / 991 / 22
நடைமுறை : வழமை

எதிர்

1. விவசாயிகள் பல நோக்கு கூட்டுறவுச் சங்கம்
வள்ளுவர்புரம். விசுவமடு.
2. பொது முகாமையாளர்,
விவசாயிகள் பல நோக்கு கூட்டுறவுச் சங்கம்
வள்ளுவர்புரம், விசுவமடு.
3. தலைவர்,
விவசாயிகள் பல நோக்கு கூட்டுறவுச் சங்கம்
வள்ளுவர்புரம், விசுவமடு.

எதிராளிகள்

**அக்கறை உடைய தரப்பினர்களுக்கு**

மேலே பெயர் குறிப்பிடப்பட்டுள்ள வழங்காளி இந் நீதிமன்றில் மேலே பெயர் குறித்துரைக்கப்பட்டுள்ள எதிராளிகளுக்கு எதிராக பணம் (கடன் அறவிடுதல்) தொடர்பான இவ் வழக்கினை தாக்கல் செய்து **27.10.2022** ஆம் திகதியன்று வழக்காளியானவர் பதிவு பெற்ற சட்டத்தரணி M.I. ஷாமிலா அவர்களின் அனுசரணையுடன் சட்டத்தரணி யாழினி கௌதமன் அவர்கள் மூலம் தோன்றி இவ் வழக்கில் மேற்கொண்ட வாய்மூல சமர்ப்பணத்தையும் தாக்கல் செய்யப்பட்ட பிராதினையும், சத்தியக் கூற்று மற்றும் ஆவணங்களையும் கௌரவ மன்று கருத்தில் எடுத்து கௌரவ மாவட்ட நீதிபதி செல்வநாயகம் லெனின்குமார் அவர்கள் பிராதில் கோரிய இரண்டாம் நிவாரணமாகிய 1 ஆம் எதிராளிக்குச் சொந்தமான அசையும் இயந்திரத்தை வழக்காளிக்கு உரித்தான தீர்வைத் தொகையை முழுமையாக செலுத்தி முடிக்கும் வரை எதிராளிகள் விற்கவோ, உருமாற்றவோ, அல்லது கைமாற்றவோ கூடாது என கட்டாணை வழங்கியும் மூன்றாம் நிவாரணமாகிய இடைக்காலத்தடைக் கட்டளைக்கான அறிவித்தலை பிறப்பித்தும் உள்ளது.

எனவே குறித்த இவ் வழக்கு தொடர்பில் மேலே பெயர் குறிப்பிடப்பட்ட எதிராளிகளுக்கு மேலதிகமாக விசுவமடு விவசாயிகள் பல நோக்கு கூட்டுறவுச் சங்கம் தொடர்பில் அக்கறை உடைய தரப்பினர்கள் எவரேனும் இருப்பின் நீவீர் **10.11.2022** ஆம திகதி முற்பகல் **09.30** மணியளவில் மன்றில் தோன்றுமாறு இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

"மன்றின் கட்டளைப்படி"

திகதி: 27.10.2022

பதிவாளர்
மாவட்ட / நீதிமன்றம், கிளிநொச்சி

# மரண அறிவித்தல்



## வைரவிப்பிள்ளை மகாலிங்கம்

திக்கம்புரை வயாவிளானை பிறப்பிடமாகவும் லண்டனை வதிவிடமாகவும் கொண்ட **கம்பர்** என அனைவராலும் அன்பாக அழைக்கப்படும் **வைரவிப்பிள்ளை மகாலிங்கம்** அவர்கள் கடந்த 27.10.2022 அன்று இறைவனடி சேர்ந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைரவிப்பிள்ளை - சோதிப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்ற மார்கண்டு - சிவபாக்கியம் தம்பதியினரின் மருமகனும், புஷ்பலதாவின் பாசமிகு கணவரும், யாழேசன், யாழருதி, ஆரதி ஆகியோரின் அன்புத் தந்தையும், அனுஷ்காவின் மாமனாரும், காலஞ்சென்ற இராசம்மா, காலஞ்சென்ற கதிரவேலு, சரஸ்வதி, காலஞ்சென்ற தவராசா, ஆனந்தராசா, செல்வலிங்கம், முகிலன் ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார். .

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

**இறுதிக் கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கபடும்.**

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

தொடர்புகளுக்கு:
கெவின் - 0044 7960 766 059
முகிலன் - 0044 7951 123 629
தீசன் - 0044 7727 121 936
செல்வம் - 0044 7769 044 524
விமலதீசன் - 077 354 5107

தகவல்:
குடும்பத்தினர்.

(cr. 7023) (2.6)

# பாணுக்குள் குண்டூசிகள்



யாழ் ஒக். 29

பாணுக்குள் இருந்து மூன்று குண்டூசிகள் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை மீட்கப்பட்டுள்ளன.

அச்சுவேலிப் பகுதியில் உள்ள கடை ஒன்றில், குடும்பத் தலைவர் ஒருவர் றோஸ் பாண் வாங்கியுள்ளார்.

பாணை வீட்டுக்குக் கொண்டு சென்று பிள்ளைகளுக்கு வழங்கினார். அதன்போதே பாண் ஒன்றினுள் மூன்று குண்டூசிகள் இருந்ததை அவதானித்துள்ளார். அதன் பின்னர் இது தொடர்பில் அந்தப் பகுதி பொதுச் சுகாதாரப் பரிசோதகருக்கு அறிவித்தார். அதனையடுத்து சுகாதாரப் பரிசோதகர் விசாரணைகளை முன்னெடுத்துள்ளார்.

(ஒ-14-26)

# 16 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

தோற்றம்
02 • 04 • 1948



மறைவு
12 • 10 • 2022

கடந்த (12.10.2022) புதன்கிழமை இறைவனடி சென்ற
எமது குடும்ப விளக்கு

## திருமதி பாக்கியதுரை புனிதவதி

அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (29.10.2022) சனிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும். இந் நிகழ்வில் உற்றார், உறவினர், நண்பர்களும் கலந்துகொண்டு அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் பங்குகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மேலும் எமக்கு ஒத்துழைப்பு வழங்கிய அயலவர்கள், நண்பர்கள், உற்றார், உறவினர் மற்றும் J/87 கிராமசேவை உத்தியோகத்தர், பொலிஸ் உத்தியோகத்தவர்கள், மலர்வளையங்கள் வைத்தவர்களுக்கும், துண்டுப்பிரசுரம் விநியோகித்தவர்களுக்கும், அவ்வேளை உணவுத் தேவைகளை பூர்த்திசெய்த அன்பர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

56 / 11, அசாத் வீதி,
யாழ்ப்பாணம்.

(cs 47346) (2.6)

பிரிவால் துயருறும்
பிள்ளைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறைவரி திருத்த சட்டவரைவு அரசமைப்புக்கு முரணானது

## நீதிமன்றில் மனுத்தாக்கல்

**கொழும்பு, ஒக். 29**

**நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள உள்நாட்டு இறைவரி திருத்தச் சட்ட வரைவு அரசமைப்புக்கு முரணானது எனத் தெரிவித்து உயர்நீதிமன்றில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை மனுத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது.**

முன்னணி தனியார் நிறுவன மொன்றின் பொதுமுகாமையா ளரால் இந்த மனுத்தாக்கல் செய் யப்பட்டுள்ளது. மனுவின் பிரதி வாதியாக சட்டமா அதிபரின் பெயர் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

குறித்த சட்டவரைவில் சில சரத்துக் களை நீக்க வேண்டும். அல்லது மூன்றிலிரண்டு பெரும்பான்மை யுடன் அதனை நிறைவேற்ற வேண்டும் என அந்த மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சர்வதேச நாணய நிதிய நிதியைப் பெறுவதற்கு மேற்கொண்ட ஒப்பந் தத்துக்கமைய வரிச் சீர்திருத்தங் கள் மற்றும் அரச வருமானத்தை அதிகரிப்பது உள்ளிட்ட விடயங் கள் தொடர்பில், ஜனாதிபதியால் இந்த உள்நாட்டு இறைவரி திருத் தம் நாடாளுமன்றில் முன்வைக் கப்பட்டது.

இதன்மூலம் மொத்த வருமானம் ஒரு லட்சம் அல்லது அதற்கு மேல் வருமானம் கொண்ட தனிநபர் ஒருவருக்கு வரி விதிக்கப்படவுள் ளமை குறிப்பிடத்தக்கது. (ச-இ)

# சித்திர முத்திரைகள் கண்காட்சி இன்று

யாழ்ப்பாணம், ஒக். 29

திருமறைக் கலாமன்றத்தின் கலைத்தூது அழகி யல் கல்லூரியின் ஏற்பாட்டில் "சித்திர முத்திரைகள்" என்னும் ஓவிய, கைவினைப் பொருள்களின் கண் காட்சி, யாழ்ப்பாணம் கலைத்தூது அழகியல் கல்லூரி யில் இன்று சனிக்கிழமை தொடக்கம் எதிர்வரும் 31 ஆம் திகதி திங்கட்கிழமை வரை தினமும் காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை நடைபெறவுள்ளது. "சித்திர முத்திரைகள்" கண்காட்சியின் ஆரம்ப நிகழ்வு இன்று காலை 9.30 மணிக்கு இடம்பெறும்.

இதில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாண வலயக் கல்வி அலுவலகத்தின் அழகியல் பாட பதில் உதவிக் கல்விப் பணிப்பாளர் துரைசிங்கம் துசியந்தன் கலந்து கொண்டு கண்காட்சியை ஆரம்பித்து வைக்கவுள்ளார். (ஒ-14)



# கனரக வாகனம் கவிழ்ந்து விபத்து

## இருவர் காயம்!

வவுனியா, ஒக். 29

மரம் ஏற்றிச் சென்ற கனரக வாகனம் கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் இருவர் காயமடைந்தனர். இந்த விபத்து ஓமந்தை பன்றிக்கெய்தகுளம் பகுதி யில் கடந்த புதன்கிழமை இடம்பெற்றது.

வெட்டப்பட்ட மரத்துண்டுகளை ஏற்றிக் கொண்டு ஏ-9 வீதியூடாக வவுனியா நோக்கிச் சென்ற கனரக வாகனம், ஓமந்தை பன்றிக்கெய்தகுளம் பகுதியில் பயணித்த போது சாரதியின் கட்டுப்பாட்டையிழந்து தடம் புரண்டு விபத்துக்குள்ளானது.

விபத்தில் சாரதி உள்ளிட்ட இருவர் காயமடைந்தது டன் சுமார் ஒரு மணிநேரம் ஏ-9 வீதியூடான போக் குவரத்தும் பாதிக்கப்பட்டது. அதனையடுத்து சம்பவ இடத்துக்கு விரைந்த ஓமந்தைப் பொலிஸார் போக் குவரத்தை சீர் செய்ததுடன் விபத்துத் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ஒ-14-18)

# உங்களுக்கு வந்தால் இரத்தம் எங்களுக்கு வந்தால் 'சட்னியா'?

## இப்படிக் கேட்கிறார் நாமல் ராஜபக்ச

அச்சுறுத்தல்கள் மற்றும் எதிர்ப்பு போராட்டங்கள் மூலமான அரசியலையே ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் ஜே.வி.பி. என்பன முன்னெடுத்து வரு கின்றன. அந்தக் கட்சியினர் போராட்டங்களை நடத்தினால் அது ஜனநாயகம். நாம் நடத்தினால் அடக்குமுறையா?

இவ்வாறு பெரமுன கட்சியின் பதில் தேசிய அமைப் பாளர் நாமல் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச தலைமை யில் பெரமுனவின் புத்தளம் ஆனமடுக தொகுதிக் கூட்டத்தில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அச்சுறுத்தல்கள், வன்முறைகள் மூலம் எமது அர சியல் பயணத்தை தடுத்துவிடமுடியாது. எப்படியான சவால்கள் வந்தாலும் மீண்டும் மீண்டும் எமது கட்சி எழுச்சி நோக்கி பயணிக்கும்.

அச்சுறுத்தல்கள் மற்றும் எதிர்ப்பு போராட்டங்கள் மூலமான அரசியலையே ஐக்கிய மக்கள் சக்தி மற் றும் ஜே.வி.பி. என்பன முன்னெடுத்து வருகின்றன. எமது கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களின் வீடு களை கொளுத்தி, அவர்களை அச்சுறுத்தி எமது பயணத்தை தடுத்துவிடலாம் என எவரும் நினைத்து விடக் கூடாது. எவ்வாறான சவால்கள் வந்தாலும் மக்களுடன் இணைந்து எமது எழுச்சிப் பயணம் முன்னோக்கி தொடரும் - என்றார். (ச-44)

# கலை வளவாளர்களிடம் விண்ணப்பங்கள் கோரல்

யாழ்ப்பாணம், ஒக். 29

புத்தசாசன சமய மற்றும் கலாசார அலுவல் கள் அமைச்சின் கீழ் வடமராட்சி கிழக்கு பிர தேச செயலர் பிரிவுக்குட்பட்ட மருதங்கேணிப் பகுதியில் அமைந்திருக்கும் கலாசார மத்திய நிலையம் மற்றும் கிராமிய நிலையங்களில் கர்நாடகசங்கீதம், பரதநாட்டியம், சித்திரமும் வடிவமைப்பும், நாடகமும் அரங்கியலும் மற் றும் இசைவாத்தியக் கருவிகள் ஆகிய பாட நெறிகள் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. பாடநெறிகளைக் கற்பிக்க ஆர்வமுடைய மருதங்கேணி பிரதேசசெயலர் பிரிவுக்குட் பட்ட வளவாளர்கள் தங்களது சுயவிவரங் களை எதிர்வரும் நவம்பர் மாதம் 12 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு நிலையப் பொறுப்பதிகாரி, கலாசார மத்திய நிலையம், மருதங்கேணி எனும் முகவரிக்கு நேரடியாகவோ அல்லது தபால் மூலமா கவோ அனுப்பி வைக்குமாறு நிலையப் பொறுப்பதிகாரி த.அமல்ராஜ் அறிவித்துள் ளார். அத்துடன் மேலதிக விவரங்களுக்கு 0779191692 என்ற அலைபேசி இலக்கத் துடன் தொடர்புகொள்ளுமாறும் குறிப்பிட் டுள்ளார். (ஒ-14-26)

✦ ✦ ✦

யாழ்ப்பாணம், ஒக். 29

புத்தசாசன சமய மற்றும் கலாசார அலு வல்கள் அமைச்சின் கீழ் சங்கானை பிர தேச செயலர் பிரிவுக்குட்பட்ட சங்கானை கலாசார மத்திய நிலையம் மற்றும் கிராமிய நிலையங்களில் கர்நாடக மற்றும் கிராமிய சங்கீதம், கர்நாடக மற்றும் கிராமிய நடனம், சித்திரம் மற்றும் ஓவியக்கலை, நாடகமும் அரங்கியலும், மிருதங்கம் மற்றும் வயலின் ஆகிய பாடநெறிகள் நடத்த ஏற்பாடு செய் யப்பட்டுள்ளது.

எனவே பாடநெறிகளைக் கற்பிக்க ஆர்வ முடைய சங்கானை பிரதேசசெயலர் பிரி வுக்குட்பட்ட வளவாளர்கள், தொலைபேசி இலக்கம் உள்ளடங்கலாக தங்களது சுய விவரங்களை எதிர்வரும் நவம்பர் மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு கலாசார மத்திய நிலையம், பட்டினசபைவீதி, சங்கானை எனும் முகவரிக்கு நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ அனுப்பி வைக்குமாறு நிலையப் பொறுப்பதிகாரி அறி வித்துள்ளார். அத்துடன் மேலதிக விவரங் களுக்கு 0772478017 என்ற அலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளுமாறும் குறிப்பிட்டுள்ளார். (ஒ-14-26)

# வறுத்தலைவிளான் ஆலய குளத்தில் மணலகழ்வு

யாழ்ப்பாணம், ஒக். 29

வலி.வடக்கில் அமைந்துள்ள வறுத் தலைவிளான் பிள்ளையார் ஆலயத் தின் குளத்தில் பெருமளவில் மணல் அகழப்பட்டு வெளியிடங்களுக்கு விற்பனை செய்யப்படுகின்றது என அப்பகுதி மக்கள் விசனம் தெரிவித் துள்ளனர்.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில், குறித்த குளத்தில் தாமரை வளர்க்கப் போவதாகத்தெரிவித்து குளத்திலிருந்து சுமார் 200 லோட்டுக்கும் அதிகமான மணல் வெளியிடங்களுக்கு எடுத்துச் செல்லப்படுகின்றது. பிரதேசசபை அனுமதியுடனேயே மணல் அகழப் படுகிறது என அவர்களால் தெரிவிக் கப்படுகிறது. கால்நடைகள் நீரருந்தும் குளத்தில் பாரியளவில் இடம்பெறும் மணலகழ்வு காரணமாக கால் நடைகள் குளத்தினுள் வீழ்ந்து இறக் கும் துர்ப்பாக்கிய நிலை ஏற்படுகிறது. எனவே இந்தச் சட்டவிரோத மண லகழ்வை தடுக்க உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் - என் றனர்.

இதுதொடர்பில் வலி.வடக்குப் பிர தேசசபையின் தவிசாளர் சுகிர்தனை தொடர்புகொண்டு கேட்டபோது குறித்த குளம் கமநலசேவைகள் திணைக் களத்தின்கீழ் உள்ளது. மணல் அகழ் வுக்கு தாம் அனுமதி வழங்கவில்லை எனத் தெரிவித்தார்.

இதுதொடர்பில் வலி.வடக்குப் பிரதேச செயலாளரை தொடர்புகொண்டபோது மணல் அகழ்வு தொடர்பில் கடந்த 18ஆம் திகதி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது - என் றார். (ச-27)

# குருதிக்கொடை

யாழ்ப்பாணம், ஒக். 29

இலங்கை மின்சாரசபை யின் 53 ஆவது ஆண்டு விழாவை முன்னிட்டு, இலங்கை மின்சாரசபை வடமாகாண ஊழியர் நலன் புரி மற்றும் விளையாட்டுச் சங்கத்தால் குருதிக்கொடை ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அதற்கமைய குருதிக் கொடைமுகாம்யாழ்ப்பாணம் பழைய பூங்கா வீதியிலுள்ள இலங்கை மின்சாரசபை பிர திப் பொது முகாமையாளர் அலுவலகத்தில் எதிர்வரும் நவம்பர் மாதம் முதலாம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 9 மணி தொடக்கம் பிற்பகல் 2 மணி வரை இடம் பெறவுள்ளது. (ஒ-14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒட்டுசுட்டான் மருத்துவமனையில் மருந்துக் கலவையாளர் இல்லை

## திரும்பிச் செல்லும் நிலையென நோயாளிகள் கவலை

முல்லைத்தீவு - ஒட்டுசுட்டான் பிரதேச மருத்துவ மனையில் சுமார் ஒரு மாதகாலமாக மருந்துக் கல வையாளர் இல்லாமையால் நோயாளர்கள் திரும்பிச் செல்லும் நிலை ஏற்பட்டுள்ளது என மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,

நூற்றுக்கணக்கான மக்கள் நாள்தோறும் ஒட்டுசுட்டான் பிரதேச மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக செல்கின் றனர். தூரஇடங்களிலிருந்து முச்சக்கரவண்டிகளுக்கு அதிக பணம் செலுத்தி மக்கள் மருத்துவமனைக்கு வந்தபோதும் மருந்துகளைப் பெற்றுக்கொள்ள முடி யாது இன்னல்களுக்கு முகம் கொடுக்க நேரிடுகிறது. இதுதொடர்பில் உரிய அதிகாரிகள் மருந்துக் கலவை யாளர் ஒருவரை நியமிக்க உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றனர்.

இதுதொடர்பில் முல்லைத்தீவு மாவட்ட பிராந்திய சுகா தார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் மு.உமாசங் கரை தொடர்பு கொண்டு கேட்டபோது,

முல்லைத்தீவு மாவட்டத்தில் 33 மருந்துக் கலவையா ளர்கள் இருக்கவேண்டிய நிலையில் 21 பேர் மாத்திரமே உள்ளனர். அவர்களில் 4 பேர் விடுமுறையில் உள்ள தால் 17 பேர் மாத்திரமே கடமையிலுள்ளனர்.

மூன்று மருத்துவமனைகளில் நிரந்தரமாகவே மருந்துக் கலவையாளர் இன்றி சேவை வழங்கப்படுகிறது. ஒட்டு சுட்டான் மருத்துவமனையில் சேவையிலிருந்த மருந் துக் கலவையாளர் நீண்டகாலமாக விடுமுறையில் உள்ளார். இதனாலேயே இவ்வாறான நிலை காணப்ப டுகிறது - என்றார். (ச-19)

# கசிப்புக் காய்ச்சும் பகுதி பொலிஸாரால் முற்றுகை

கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பலாலி வீதி, கோண்டாவிலில் கசிப்புக் காய்ச்சும் பகுதி கோப்பாய் பொலிஸாரால் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை முற்றுகையிடப்பட்டது.

கோப்பாய் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் சுற்றி வளைப்பு மேற்கொள்ளப்பட்டது.

கோண்டாவிலில் தொழிற்சாலை ஒன்றை நடத்து வது போல் கசிப்புக் காய்ச்சும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

கோப்பாய் பொலிஸார் அந்தப் பகுதியை முற்று கையிட்ட போது, சந்தேகநபர் தப்பித்துச்சென்ற நிலையில் 60 லீற்றர் கோடா மற்றும் கசிப்பு காய்ச் சுவதற்குப் பயன்படுத்தும் உபகரணங்கள் என்பன மீட்கப்பட்டன.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கோப் பாய் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ஒ-14.27)

## ஹெரோய்னுடன்...

பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சங்கானை யூனியன் வீதி யில் ஹெரோய்னை நுகர முற்பட்டவேளை, கண்கா ணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த பொலிஸாரால் 25 வயதான இளைஞர் ஒருவர் நேற்றுமுன்தினம் மாலை கைது செய்யப்பட்டார். அவர் நேற்று மல்லா கம் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டார். இதையடுத்தே குறித்த நபரை எதிர்வரும் 8ஆம் திகதிவரை விளக்க மறியலில் வைக்குமாறு உத்தரவிட்டப்பட்டது.

குறித்த இளைஞர் யாழ்ப்பாணம் பொம்மைவெளிப் பகுதியில் இருந்தே ஹெரோய்னைக் கொள்வனவு செய்தார் என்று முதற்கட்ட விசாரணைகளில் தெரிய வந்துள்ளது . (அ-ம-125)

## யாழ்...

மாணவர் இடை விலகலும் அதிகரித்து வரும் நிலை யில், அதற்கு எதிராக மாணவ சமூகத்துக்கிடையில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காகவே இந்தத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

வடக்கு-கிழக்கு, மலையகம் ரீதியில் உள்ள பாடசாலை களில் யாழ். பல்கலைக்கழக கலைப்பீடத்தின் பயிற்சி பெற்ற ஆளணியினரால் இந்தத் திட்டம் முன்னெடுக் கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-125)

# கொக்குவில் இந்துவில் தேசிய கரம் போட்டிகள்

யாழ்ப்பாணம், ஒக். 29

யாழ். கொக்குவில் இந்துக் கல்லூரியில் 33ஆவது தேசிய கரம் போட்டிகள் நேற்று நடைபெற்றன.



மாகாண உடற்கல்வி உதவிப்ப ணிப்பாளர் இ.இராஜசீலன் தலை மையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக மாகாண கல்விப்பணிப்பாளர் உதயகுமார், வடக்கு மாகாண மேலதிக கல்விப் பணிப்பாளர் ஜோன் குயின்ரன்ஸ் ஆகியோர் கலந்துகொண்டனர். விருந்தினர்கள், மேற்கத்தேய இசை முழங்க அழைத்துவரப்பட்டு நிகழ்வு ஆரம்பிக்கப்பட்டது. போட்டியில் 9 மாகாணங்க ளையும் சேர்ந்த தமிழ், சிங் கள, முஸ்லிம் பாடசாலை மாணவர்கள் பங்குபற்றினர். நிகழ்வில் கல்வியமைச்சிலி ருந்து வருகை தந்தவர் லலித் பந்துல குணவர்த்தன, கரம் பயிற்றுவிப்பாளர்கள், போட் டியாளர்கள், ஆசிரியர்கள், அதிபர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (ச-27)

# விவசாயிகளுக்கு கௌரவிப்பு வலி.மேற்கு சபையில் தீர்மானம்

யாழ்ப்பாணம், ஒக். 29

வலி.மேற்கு பிரதேசசபைக்குட்பட்ட பிரதேசங்களில் விவசாய நட வடிக்கைகளில் தொடர்ந்து ஈடுபட்டுவரும் விவசாயிகள் கௌரவிக்கப்பட வேண்டும் என்று பிரதேசசபையில் தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டது.

வலி.மேற்கு பிரதேசசபையின் மாதாந்த அமர்வு, தவிசாளர் நடனேந்திரன் தலை மையில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்றது.

இதன்போது கருத்துத்தெரிவித்த சபையின் உறுப்பினர் பொன்ராசா, வலி.மேற்கு பிரதே சசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் நீண்ட காலமாக பல்வேறு சவால்களுக்குட்பட்டு விவசாய நடவடிக்கைகளில் ஈடுபட்டு வரக்கூ டிய விவசாயிகளை கௌரவிக்க வேண்டியது சபையின் கடமையாகக் காணப்படுகின்றது. எனவே விவசாயிகளைக் கௌரவிப்பதற்கு இந்த சபை ஏகமனதாக அனுமதியளிக்க வேண்டும் - என்றார்.

அதற்குப் பதிலளித்த சபையின் உபதவிசாளர் சச்சிதானந்தம், விவசாயிகளைக் கௌரவிக்க எனது முழுமையான ஆதரவை வழங்குகின் றேன். இன்றைய காலகட்டத்தில் பொறியிய லாளர், மருத்துவர் என உயர் பதவிகளாக அதற்கு மதிப்பளிக்கக் கூடியவர்கள் எம்மைப் போன்ற விவசாயிகளைக் குறைத்தே மதிப்பி டுகின்றார்கள். விவசாயம் இல்லாவிடில் ஒருவ ரும் உயிர் வாழ முடியாது. விவசாயிகளைக் கௌரவிப்பது நிச்சயம் வரவேற்கப்படக்கூடிய விடயம் - என்றார்.

அதன்பின்னர் கருத்துத் தெரிவித்த சபையின் தவிசாளர் நடனேந்திரன், விவசாயிகளைக் கௌரவிக்கும் செயற்றிட்டத்துக்கு ஆளுந ரின் அனுமதி பெறவேண்டும். மேலும் வட் டார உறுப்பினர்களினுடைய உதவியுடனும் கமநல சம்மேளனங்களுடன் இணைந்தும் விவசாயிகள் தெரிவு செய்யப்பட்டு அவர்க ளுக்குரிய கௌரவிப்புக்கள் வெகுவிரைவில் இடம்பெறும் - என்றார். (ஒ-14-125)

தென்னங் காணி விற்பனைக்குண்டு
கிளாலி வீதி, எழுதுமட்டுவாளில் 21 ஏக்கர் தென்னங்காணி விற்பனைக்குண்டு.
தொடர்பு:
S.நசேடன் - 074 383 2815
கனகு - 076 840 3737

காணிகள் விற்பனைக்கு
➡ முகமாலையில்
11 1/2 பரப்புக் காணியுடன் வீடும் விற்பனைக்கு.
➡ மந்துவிலில்
14 1/2 பரப்பு வீடு கட்டக்கூடிய காணி விற்பனைக்கு.
➡ முகமாலையில்
52 1/2 நிலப்பரப்புக் காணியும் விற்பனைக்குண்டு.
(தரகர் தேவை இல்லை)
தொடர்பு: 076 661 8169
077 659 7250
W/app: 0041 7871 68480

# கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையில் ஆசிரியராகக் கடமையாற்றும் திருமதி புவி பகீரதன் அவர்களின் அன்புத் தாயார்

திருமதி

**விஸ்வலிங்கம் புஸ்பராணி**

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத் தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரி விப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.



தோற்றம் 14.12.1955 மறைவு 28.10.2022

ஆசிரியர் நட்புறவுக்கழகம்
யா/ மானிப்பாய் இந்துக் கல்லூரி

# 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னையின் மடியில் 06 . 10 . 1950



ஆண்டவன் பாதங்களில் 29 . 10 . 2019

**அமரர் தில்லையம்பலம் துரைராசசிங்கம்**
(தாத்தா)

திதி : ஐப்பசி மாத பூர்வபட்ச துதியை (29.10.2022)

மேகம் மூடிய வானமாய்
மூன்று ஆண்டுகள் கரைந்ததே
கரைந்து போனாலும் எமக்கு
கலையாத நின் நினைவுகளே
விழி விட்டுத் தூரம் சென்றாலும்
வழிபார்க்கும் நெஞ்சங்களே
மறக்க முடியாத துயரங்களுக்கு
மருந்தாமோ ஓடும் காலங்கள்
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!!

'துவாரகா'
கதிர்காமம் சுவாமி கோவிலடி
காரைநகர்.

என்றும் நினைவுகளோடு
மனைவி, பிள்ளைகள் : சுவாதி, பாரதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யூரியா...

கையளிக்கப்பட்டது. இதனடிப்படையில் நெற் பயிர்ச்செய்கையில் ஈடுபடும் விவசாயிகளுக்கு 50 கிலோ கிராம் எடையுடைய யூரியா உரமூடையை 10 ஆயிரம் ரூபாவுக்கு வழங்க அரசு தீர்மானித்துள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமீட்டில் முன்னெடுக்கப்பட்ட கலந்துரையாடல்களின்போது முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளுக்கு அமையவே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று விவசாய அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்தார்.

ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் சர்வதேச அபிவிருத்தியை நோக்காகக் கொண்ட ஐக்கிய நாடுகள் சபையின் முகவர் அமைப்புக்கள் பலவற்றின் நன்கொடைகளுக்கு மேலதிகமாகவே உலக வங்கியிடமிருந்து இந்தக் கடன் கிடைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-22)

## இலங்கைக்கு...

தியாகோகார்சியா தீவில் தடுத்துவைக்கப்பட்டுள்ள இலங்கையர்களை, இலங்கைக்கு நாடு கடத்தினால் அவர்கள் அங்கு சித்திரவதை மற்றும் துன்புறுத்தல்களுக்கு உள்ளாவார்கள் என்று புகலிடக் கோரிக்கையாளர்களை பிரதிநிதித்துவம் செய்யும் மூத்த சட்ட ஆலோசகர் கீத் குலசேகரம் தெரிவித்துள்ளார்.

பிரிட்டனில் உள்ள சிரேஷ்ட சட்ட ஆலோசகர் கீத் குலசேகரம் இது தொடர்பில் மேலும் தெரிவித்ததாவது:-

தியாகோகார்சியாவில் உள்ளவர்களை நாடு கடத்துவது குறித்து இலங்கைக்கோ இந்தியாவுக்கோ உத்தியோகபூர்வ அறிவிப்பு எதுவும் அனுப்பப்படவில்லை. அவர்கள் அனைவரும் புகலிடக் கோரிக்கைக்கான வலுவான ஆதாரங்களைக் கொண்டுள்ளனர். அவர்களை நாடு கடத்துவது சட்டவிரோதமானது. இலங்கையர்களின் புகலிடக் கோரிக்கையை கருத்தில் எடுக்காமல் அவர்களை வெளியேற்றமுடியாது. அவ்வாறு வெளியேற்றுவது 1951ஆம் ஆண்டின் அகதிகள் சாசனத்துக்கு முரணான விடயம்.

தற்போது தியாகோகார்சியா தீவில் அகதிகளுடைய அடிப்படை மனித உரிமைகள் பலவழிகளில் மீறப்படுகின்றன. ஆரம்பத்தில் அவர்களை பல மாதங்கள் எந்த விதத் தொடர்பும் இன்றி தடுத்துவைத்திருந்தனர். தற்போதும் அவர்கள் தற்காலிக முகாம்களில் மோசமான நிலையிலேயே தங்கவைக்கப்பட்டுள்ளனர். அவர்களை தாங்கள் 'தடுத்துவைக்கவில்லை' என தியாகோகார்சியா நிர்வாகம் தெரிவித்தாலும் அவர்களின் சுதந்திரம் நியாயமற்ற முறையில் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

அவர்களுடைய முகாம்கள் முள்வேலிகளால் முடக்கப்பட்டுள்ளன, அவர்களின் முகாம்கள் ஆயுதம் தரித்த பாதுகாப்பு படையினரின் கட்டுப்பாட்டில் உள்ளது. அங்குள்ள மக்கள் முகாம்களில் இருந்து வெளியேறமுடியாது. தொலைபேசிகளையும் இணையத்தையும் பயன்படுத்துதல் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது - என்றார். (அ-ம-7)

## நாட்டை...

சமகால அரசியல் நிலைவரம் தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

'22ஆவது திருத்தத்துக்கு நான் ஏன் வாக்களிக்கவில்லை என்று கேள்வி தொடுப்பவர்கள் அந்தத் திருத்தச் சட்டத்தால் எதைச் சாதிக்கப் போகின்றார்கள் என்பதைப் பகிரங்கமாகக் கூறவேண்டும். புதிய அரசமைப்பு கொண்டுவரப்பட வேண்டும். இந்த நிலைப்பாட்டில் நாம் உறுதியாகவுள்ளோம். அதற்கு முன்னர் பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வுகாண சகலரும் ஒன்றிணையவேண்டும்.

இலங்கையின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்தமைக்கு நாட்டை உலுக்கிய கொரோனாப் பெருந்தொற்றே பிரதான காரணம். இதைப் புரிந்தும் புரியாதவர்கள்போல் எம்மீது சிலர் வசைபாடி புலம்பித்திரிகின்றார்கள். நாடு வங்குரோத்து அடைந்தமைக்கு கோத்தாபய ராஜபக்சவோ அல்லது ராஜபக்சக்களோ காரணம் அல்லர். ராஜபக்சக்கள் மீது குற்றம் சுமத்துபவர்களும் அதற்குப் பொறுப்பு. ராஜபக்சக்கள் வீழ்ந்துவிடவில்லை. அவர்கள் ஒதுங்கி நிற்கின்றார்கள் என்பதே உண்மை.

நாட்டின் தற்போதைய நெருக்கடி நிலைமைக்குத் தலைமை தாங்கக்கூடிய வல்லமை பொருந்திய ஒரே தலைவர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கதான். அதில் மாற்றுக் கருத்து இல்லை. அவரும் நாங்களும் இணைந்து நாட்டின் அனைத்துப் பிரச்சினைகளுக்கும் தீர்வுகளைக் காண்போம். இதற்கு கட்சி, பேதமின்றி அனைவரும் ஒத்துழைப்பு வழங்கவேண்டும்' - என்றார். (அ-ம-22)

## சேந்தான்குளம்...

கடற்பகுதியில் நேற்று உருக்குலைந்த நிலையில் ஆணொருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

மீனவர்கள் கடலுக்குச் சென்றவேளை குறித்த சடலம் மிதந்துகொண்டிருப்பது அவதானிக்கப்பட்டு அது தொடர்பில் இளவாலை பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டு மேற்படி சடலம் மீட்கப்பட்டது. சடலமாக மீட்கப்பட்டவர் யார் என்பது தொடர்பான விவரங்கள் இன்னமும் தெரியவரவில்லை. இது தொடர்பான மேலதிக விசாரணைகளை இளவாலை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

வலிகாமம் கிழக்கு திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ. ஜெயபாலசிங்கம் இறப்பு விசாரணைகளை மேற்கொண்டதுடன் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சடலத்தை ஒப்படைக்குமாறு உத்தரவிட்டார். (அ-ம-26-27-125)

## வடக்கு...

வருவதை பிரதான நோக்கமாகக் கொண்டு வடமாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா மற்றும் இலங்கைக்கான ஜப்பான் தூதுவர் ஹிடேக்கி மிசுகோஷி இருவருடைய ஏற்பாட்டில் இந்த மாநாடு நடைபெற்றது.

இந்த மாநாட்டில் ஆசியான் நாடுகளான கொரியா, தாய்லாந்து, வியட்நாம், மலேசியா, இந்தோனேஷியா, இந்தியா ஆகிய நாடுகளின் இலங்கைக்கான தூதுவர்களும், சர்வதேச முகவராண்மை நிறுவனங்களான டபிள்யு.எப்.பி., யு.என்.டி.பி., ஏ.டி.பி., டபிள்யு.பி., ஜிகா ஆகிய நிறுவனங்களின் பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர்.

மாநாட்டில், வடமாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா, வடமாகாண அபிவிருத்திக்கு ஆசிய நாடுகளும், சர்வதேச முகவராண்மை நிறுவனங்களும் எவ்வாறு உதவலாம் என்பது தொடர்பில் சிறப்புரையாற்றினார்.

கலந்துரையாடலில் பங்கு கொண்ட தூதரக அதிகாரிகள் மற்றும் அரசு சார்பற்ற நிறுவனங்களின் பணிப்பாளர்கள், வடமாகாணத்தில் மேற்கொள்ளவேண்டிய அபிவிருத்தித் திட்டங்களுக்கு காத்திரமான பங்கை வகிப்பதுடன் விரைவில் வடக்கு மாகாணத்துக்குப் பயணம் மேற்கொள்ளும் தமது விருப்பத்தையும் வெளியிட்டனர். (அ-ம-27-50-20)

## பெரமுனவின்...

மக்கள் சக்தி வாக்களித்தது. முன்னாள் நிதி அமைச்சர், முன்னாள் பிரதமர், முன்னாள் ஜனாதிபதி ஆகியோர் பதவி விலகிய போதிலும், பெரமுனவின் கட்டளையின் கூடிய அரசே தற்போது இயங்கி வருகின்றது. விவசாயிகளின் உரத்தையும், மீனவர்களின் எரிபொருளையும் தடுத்து நிறுத்திய அதே எதேச்சாதிகார அரசுதான் மறைமுகமாக நாட்டை ஆள்கின்றது.

கர்ப்பிணித் தாய்மார்கள், சிறு குழந்தைகளுக்கு திரிபோஷா இல்லாத சந்தர்ப்பத்தில், எந்தச் சூழ்நிலையிலும் எதிர்க்கட்சியாக அமைச்சுப் பதவியை ஏற்க மாட்டோம். எதிர்க்கட்சியில் இருந்துகொண்டே நாட்டைக் கட்டியெழுப்பத் தேவையான உதவி ஒத்தாசைகளை வழங்குவோம்' - என்றார். (அ-ம-22)

## ஈஸ்டர்...

ஞாயிறு தாக்குதலுடன் தொடர்புடைய குற்றவாளி ஒருவரை சிறையில் சந்தித்தார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 16 ஆம் திகதி கோவையில் காரொன்றில் ஏற்பட்ட வெடி விபத்தில் ஒருவர் உயிரிழந்தார். இந்த குண்டு வெடிப்பு சந்தேகத்துக்குரிய சம்பவம் என்பதை அவதானித்த தமிழக பொலிஸார், குறித்த வெடிப்பு பயங்கரவாதச் செயலா எனக் கண்டறிய விசாரணைகளை ஆரம்பித்தனர். இது தொடர்பில் பெரோஸ் என்ற சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார். அவரிடம் பல்வேறு கோணங்களில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். இதன்போதே குறித்த நபர் இலங்கையில் உயிர்த்தஞாயிறுதினத் தாக்குதலுடன் தொடர்புடைய மொகமட் அசாருதீனை கேரள சிறையில் சந்தித்ததாகத் தெரிவித்துள்ளார்.

சிறையில் அவர்களுடனான சந்திப்பில் என்ன நிகழ்ந்தது என பெரோஸிடம் விசாரணை நடத்தி வருவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (அ-ம)

## பாலின...

வருடங்களாவது தேவையாக இருக்கின்றது என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் துணைவியான மைத்திரி விக்கிரமசிங்க தெரிவித்தார்.

'புதிய இயல்பு நிலையில் எதிர்காலத்தைச்செழுமைப்படுத்தல்' என்றதொனிப் 'பொருளில் நடத்தப்பட்டுவரும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சர்வதேச ஆய்வு மாநாட்டுத் தொடரில், பல்கலைக்கழக பாலின ஒப்புரவு மற்றும் சமத்துவ நிலையத்தால் 'பாலின ஒப்புரவு மற்றும் சமத்துவத்தின் ஊடாகப் புதிய இயல்பு நிலையில் நிலைபேறான அபிவிருத்தியை அடைதல்' என்ற தலைப்பிலான ஆய்வு மாநாடு கைலாசபதி கலையரங்கில் நேற்று முன்னெடுக்கப்பட்டது.

இந்த ஆய்வு மாநாட்டின் முதன்மை உரையாளராக, இலங்கையின் முதல் பெண்மணியும், களனிப் பல்கலைக்கழக ஆங்கிலத் துறையின் சிரேஷ்ட பேராசிரியரும், பாலின ஒப்புரவு மற்றும் சமத்துவத்தில் அனுபவம் வாய்ந்த பெண்ணியவாதியுமான மைத்திரி விக்கிரமசிங்க கலந்துகொண்டார். இதன்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தன்னிறைவு அடைந்து வரும் இலங்கையில் தற்போதைய இரண்டு வருடகாலத்தில் கொரோனாத் தொற்று நிலைமை காரணமாக பெரும் பின்னடைவு சகல துறைகளிலும் காணப்பட்டுள்ளது. அவ்வாறான நிலைமையைத் திறம்பட மாற்றுவதற்கு வாய்ப்பு இருக்கின்றது. அதற்கு எதிர்வரும் 3 வருடகாலப்பகுதி தேவையாக இருக்கின்றது - என்றார். (அ-ம-27-125)

## மக்களின்...

உடனடியாக மக்களுக்கு வழங்குமாறு அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க தெரிவித்தார்.

பௌத்தசாசன, சமய மற்றும் கலாசார அமைச்சுசார் ஆலோசனைக் குழுவின் கூட்டம் அண்மையில் நாடாளுமன்றக் கட்டடத்தொகுதியில் இடம்பெற்றது. இதன்போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

முல்லைத்தீவு - குருந்தூர்மலை விகாரையை அண்மித்த பகுதியில் தொல்பொருள் திணைக்களத்துக்குச் சொந்தமில்லாத காணிகளை விடுவிப்பது தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட கலந்துரையாடலின்போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடும் ஒருசில பௌத்த பிக்குமார் காரணமாக ஒட்டுமொத்த பௌத்த மதத்துக்கும் பாதிப்பு ஏற்படுகின்றது. இவற்றை நிறுத்துவதற்கு அமைச்சு விரைவில் தலையிட்டு உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் குழுவில் வலியுறுத்தப்பட்டது. (அ-ம)

## ஒன்றரை...

தொடர்புடைய பிரதான சந்தேகநபர், சுமார் ஒன்றரை வருடங்களின் பின்னர் மாவட்ட பொலிஸ் புலனாய்வாளர்களால் கைது செய்யப்பட்டுள்ளார்.

2021ஆம் ஆண்டு ஜூன் மாதம் செல்வபுரம் பகுதியில் கலையகம் ஒன்று தீவைத்துக் கொளுத்தப்பட்டதுடன், ஆறு பேர் மீது வாள்வெட்டுத் தாக்குதலும் நடத்தப்பட்டது. இந்தத் தாக்குதலுடன் தொடர்புடையவர் என்ற சந்தேகத்தில் பிரதான சந்தேகநபர் நீண்ட நாள்களாக பொலிஸாரால் தேடப்பட்டு வந்தார். இந்த நிலையில், யாழ். மாவட்ட பொலிஸ் புலனாய்வுத் துறையினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலை அடுத்து குறித்த நபர் இணுவில் பகுதியில் வைத்து நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார்.

அவரிடம் மேலதிக விசாரணைகள் பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (அ-ம-26-27)

## போதை...

போதை மாத்திரை விற்கமுயன்ற 29 வயதான இளைஞர் ஒருவர் நேற்றுக் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

மல்லாகம் பகுதியில் பாடசாலை மாணவர்களுக்கு இளைஞரொருவரால் போதைமாத்திரைகள் விற்கப்படுகின்றன என்று தெல்லிப்பழை பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலுக்கு அமைய மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையிலேயே மேற்படி இளைஞர் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த இளைஞன் பாடசாலை மாணவர்களுக்கு போதை மாத்திரை விநியோகிப்பதை வழக்கமாகக் கொண்டுள்ளாரா? எவ்வளவு நாள்கள் இந்த நடவடிக்கையில் அவர் ஈடுபட்டு வருகின்றார்? சந்தேகநபருக்கு போதை மாத்திரைகள் எங்கிருந்து கிடைக்கின்றன? உள்ளிட்ட பல கோணங்களில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ-ம-125-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரோஸ்மாஸ்ரேஸ் அறிமுக அமர்வு!

யாழ்ப்பாணம், ஒக். 29

ஆற்றல்மிகு தொடர்பாடல் மற்றும் தலைமைத்துவ வளர்ச்சியை நோக்காகக்கொண்டு சர்வதேச மட்டத்தில் செயற்பட்டுவரும் 'ரோஸ்மாஸ்ரேஸ் இன்டர்நஷனல்' நிறுவனத்தின் அறிமுகச் செயலமர்வு இன்று இடம்பெறவுள்ளது.

ஹற்றன் நஷனல் வங்கியின் கிறீன் கட்டடத்தெகுதியில் இடம்பெறும் இந்தச் செயலமர்வில் 'ரோஸ்மாஸ்ரேஸ் இன்டர்நஷனல்' அமைப்பின் முன்னாள் பிராந்திய ஆலோசகர் மற்றும் மாவட்ட பிரதிநிதிகள் கலந்துகொண்டு கருத்துரை வழங்கவுள்ளார்கள்.

ரோஸ்மாஸ்ரேஸ் இன்டர்நஷனல் அமைப்பானது உலகளாவிய ரீதியில் தனக்கென சுமார் 15 ஆயிரத்து 800 கழகங்களை 149 நாடுகளில் கொண்டுள்ளது.

'ரோஸ்மாஸ்ரேஸ் இன்டர்நஷனல்' அமைப்பானது வடமாகாணத்தில் சுமார் ஆறு கழகங்களை முறையே வடமராட்சி, வவுனியா, கிளிநொச்சி மற்றும் யாழ்ப்பாணத்தில் கொண்டுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ-ம)

# குவியம்' விருது விழா

யாழ்ப்பாணம், ஒக். 29

இலங்கைத் தமிழ் சினிமாக் கலைஞர்களுக்கு 'குவியம் விருதுகள்' வழங்கும் நிகழ்வு யாழ்ப்பாணம் தந்தை செல்வா கலையரங்கில் இன்று சனிக்கிழமை இடம்பெறவுள்ளது.

மாலை 5 மணிக்கு ஆரம்பமாகும் இந்த விழாவில் கலைஞர்களுக்கான செங்கம்பள வரவேற்பைத் தொடர்ந்து விருது வழங்கும் நிகழ்வு ஆரம்பமாகும். பல கலை நிகழ்ச்சிகளும் அரங்கேறவுள்ளன.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்டச் செயலர் கணபதிப்பிள்ளை மகேசனும், சிறப்பு விருந்தினர்களாக யாழ். மாநகர முதல்வர் விஸ்வலிங்கம் மணிவண்ணன், தேசிய கல்வி நிறுவக விரிவுரையாளர் கலாநிதி எஸ். ஸ்ரீபிருந்திரன், யாழ். மாவட்ட கலாசார உத்தியோகத்தர் இரட்ணராசா கிருஷ்ணகுமார், கிருபா லேணர்ஸ் உரிமையாளர் அழகசுந்தரம் கிருபாகரன், 'கனடா தமிழ் பசங்க' வின் தயாரிப்பு முகாமையாளர் வீணா, ஏ.ஆர்.சி.மொபைல் சாா்பாக சிவசாமி கஜன் ஆகியோர் கலந்து கொள்கின்றார்கள்.

கௌரவ விருந்தினர்களாக இசைவாணர் கண்ணன், ஒளிப்பதிவாளர் கே.கமலதாசன் மற்றும் சினிமா செயற்பாட்டாளர் மணிவாணன் உள்ளிட்டோர் பங்கேற்கின்றனர்.

குறும்படங்கள் மற்றும் காணொலிப்பாடல்களுக்காக வழங்கப்படவுள்ள இந்த விருதுகளுக்கான விண்ணப்பங்கள் கடந்த மார்ச் மாதம் கோரப்பட்டிருந்தன. அதற்கமைய கிடைக்கப்பெற்ற நூற்றுக்கணக்கான படைப்புக்களில் இருந்து வெற்றியாளர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். அவர்களின் பெயர் விவரங்கள் விழா மேடையில் அறிவிக்கப்படவுள்ளதுடன் விருதுகளும் வழங்கிவைக்கப்படவுள்ளன. (அ-ம-27)


அமெரிக்க லொத்தர் இலவச விசா

இன்னும் சில நாடுகளில் பதிவுகள் நிறைவடைகின்றன

ஏமாற்றங்களை தவிர்க்க உடனே பதியுங்கள்

Passport அவசியமில்லை

18 வயதிற்க்கு மேற்பட்ட யாரும் தனியாக விண்ணப்பிக்கலாம்

இலவசமாக குடும்பத்துடன் நிரந்தரமாக அமெரிக்காவில் குடியேற இரண்டு வாய்ப்புக்கள்

இந்த வருடம் A/L எடுக்கிறவர்களும் விண்ணப்பிக்கலாம்

வெளிநாட்டு உதவி இல்லாதவர்களுக்கும் வெளிநாடு செல்ல காசு இல்லாதவர்களுக்குமான ஒரே ஒரு அரிய சந்தர்ப்பம்

V2 Travels

இதுவரை எமக்கூடாக விண்ணப்பித்த நூற்றுக்கணக்கானோர் அமெரிக்காவில் குடும்பத்துடன் வசிக்கின்றார்கள்

0768226244



## பணிப்பெண் தேவை

யாழ்.திருநெல்வேலியில் அமைந்துள்ள சிறிய நடுத்தர குடும்பம் ஒன்றிற்கு வீட்டில் தங்கியிருந்து பணிபுரிய பணிப்பெண் தேவை.

077 232 0354



## வேலையாள்கள் தேவை

யாழ்நகரில் நல்லூர். கோயிலுக்கு அண்மையில் இயங்கும் சைவ / அசைவ உணவகத்திற்கு உயர்தர யாழ். உணவு தயாரிக்க உடன் வேலையாள்கள் தேவை.

ஆண் / பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். சம்பளம் நேரில் பேசி தீர்மானிக்கப்படும். நல்லூருக்கு அண்மித்த பகுதியில் உள்ளவர்கள் விரும்பத்தக்கது.

077 736 0353

51,அம்மன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.

(cs21400) (2.6)



## தேவை

வேப்பம் விதை மொத்தமாகவும் சில்லறையாகவும் நியாயமான விலையில் எடுக்கப்படும்.

0779974311



# காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கைதடி A9 பிரதான வீதியுடன் 3 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

நிலப்பரப்பு.

- நல்ல தண்ணீரூற்றுச் சூழல்
- அனைத்து விதமான வியாபார நிலையங்கள் அமைப்பதற்கும்
- வீடுகள் கட்டுவதற்கும் உகந்த இடம்.

பார்வையிடும் நேரம்:-

- காலை 6 மணிமுதல் மாலை 6 மணிவரை

தரகர் தேவையில்லை.

தொடர்பு:- ஜெயம்

077 986 5457

077 814 7389



# பணியாளர் தேவை

எமது கல்வி நிறுவனம் கீழ்வரும் பணியாளர்களை எதிர்பார்க்கின்றது.

1. வகுப்பு மேற்பார்வையாளர் (பெண்)
2. சிற்றுண்டிச்சாலை காசாளர்/ ஊழியர் (பெண்)

நாளை மறுதினம் (31.10.2022) திங்கட்கிழமை மதியம் 2.00 மணிக்கு நேர்முகத்தேர்விற்கு சமுகமளிக்கவும்.

021 221 6690 - 077 336 4055

யாழ்ப்பாணத்தில் உள்ள பிரபல்யமான கல்வி நிறுவனம்

(Navalar Road - Brown Road Junction, Jaffna)

(cr.38369) (2.6)


# மரண அறிவித்தல்

மண்ணில் 14 . 12 . 1955



விண்ணில் 28 . 10 . 2022

## திருமதி புஸ்பராணி விஸ்வலிங்கம்

ஊரெழு கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி புஸ்பராணி விஸ்வலிங்கம் கடந்த (28.10.2022) அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற லாசரஸ் தையலம்மா தம்பதியரின் புதல்வியும், கந்தையா விஸ்வலிங்கம் அவர்களின் அன்பு மனைவியும், கிருபாகரன் (ஆசிரியர் - கொழும்பு சென் பெனடிக் கல்லூரி), சசிகரன் (பிரதேச சபை உறுப்பினர், வலிகிழக்கு), விஸ்ணுகரன் (வடமாகாண உதவிக் கல்விப் பணிப்பாளர்-விசேட கல்வி), புவி (ஆசிரியர் - மானிப்பாய் இந்துக் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தாயாரும், நடராசா (ஊரெழு, பர்வதவர்த்தினி அம்பாள் ஆலய தர்மகர்த்தா), கந்தசாமி (கனடா), ஆத்மஞானி - ஶ்ரீசற்குரு பூரண சுவாமிகள் (சுவிசர்லாந்து) ஆகியோரின் சகோதரியும், நந்தினி, புவனேஸ்வரி ஆகியோரின் மைத்துனியும், கார்த்திகா (முன்னாள் மக்கள் வங்கி ஊழியர் - கொழும்பு), கார்த்திகைச்செல்வி (ஆசிரியர்- மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி), விஜிதா, பகீரதன் (அதிபர் - காங்கேசன்துறை மகா வித்தியாலயம்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், வர்ஜானி, லாருசன், கவிஷ்னுஹா, கிருஸ்ணிஹா, ஹறிகிருஸ்ணா, தஷ்வினா, பிரணித் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (30.10.2022) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10.00 இற்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பொக்கணை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

கலைவாணி முன்பள்ளி வீதி, ஊரெழு கிழக்கு, ஊரெழு.
077 447 1123, 077 911 6321

தகவல்: கணவன், பிள்ளைகள் மற்றும் குடும்பத்தினர்.

(CR 36294) 1/6


# காணி விற்பனைக்கு

## யாழ்ப்பாணம் ஒட்டுமடத்தில் 12 ½ பரப்புக் காணி விற்பனைக்கு

- ஒட்டுமடம் சந்தியிலிருந்து அராலி செல்லும் பிரதான காபெட் வீதி முகப்புடன்(காரைநகர் செல்லும் பிரதான காபெட் வீதி) யாழ். மாநகரசபை எல்லைக்குட்பட்டது.
- 2 பரப்பாகவும், 3 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்
- யாழ். பஸ்நிலையத்திலிருந்து 1 ½ KM தூரம்
- பார்வையிடும் நேரம்: காலை 08.00 - மாலை 5.30
- ஒரு பரப்பின் விலை : 6 இலட்சம் ரூபா

தொடர்பு: 077 874 8135
077 408 2649



# விற்பனைக்கு

கோப்பாய் வடக்கு கயட்டைப்புலம் வீதியில் நிலப்பரப்பு முறையே 10, 4 இரண்டு காணித்துண்டுகள் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:- 077 843 5502
074 373 9982



# காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் புத்தூரில் 114 பரப்புக் காணி விற்பனைக்கு

- மூன்று பரப்பாகவும் நான்கு பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்
- 18 பாதையுடன். நன்னீர் ஊற்று நிலம். நல்ல சூழல்
- 775 வழி பேருந்துகள் செல்லும் காபற் வீதி
- புத்தித்துறை வீதி புத்தூர் சந்தியில் இருந்து சாவகச்சேரி செல்லும் பிரதான காபற் வீதி அருகாமையில்
- புத்தூர் சந்தியில் இருந்து 1¼ Km தூரம் (சோமஸ்கந்தா கல்லூரியில் இருந்து)
- 1 பரப்பின் விலை 2 லட்சம்

தொடர்புகளுக்கு: 077-6585999
076-7558606


செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021 493 1111 | செய்தி : news@uthayan.com | விளம்பரம்: advt@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 29.10.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.